பக்கங்கள் : பத்து

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை (02.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 278

# மன்னார் சிலாவத்துறையில் படை நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு,செப்.2

மன்னாருக்கு தெற்கே சிலாவத்துறையில் நேற்றுக் காலை இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி புதிய படை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றைய தாக்குதலின் போது அரிப்பை படையினர் கைப்பற்றிவிட்டதாகவும் சிலாவத்துறையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

பொதுமக்கள் அரிப்பில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இராணுவத்தின் முன்னரங்கப் பகுதிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து தாம் தாக்குதல் நடவடிக்கையை தொடங்கியதாகவும் படைத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பிடியில் உள்ள 6ஆயிரம் தொடக்கம் 7ஆயிரம் வரையிலான மக்களை பாதுகாப்பதற்கான (10ஆம் பக்கம் பார்க்க)

# இடம்பெயர்ந்த பொதுமக்கள் மீதான கிளைமோர் தாக்குதலில் 9 பேர் பலி!

## முசலியில் ஆழ ஊடுருவும் அணி கைவரிசை

கிளிநொச்சி,செப்ரெம்பர் 2

மன்னார், சிலாவத்துறையில் நேற்று நடத்தப்பட்ட இராணுவத் தாக்குதலுக்கு அஞ்சி முசலிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து கொண்டிருந்த பொதுமக்களின் வாகனத்தின் மீது ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர் தாக்குதல் நடத்தினர். அத்தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உட்பட 9பேர் உடன் பலியாகினர்.

சிறுவர்கள், பெண்கள் உட்பட 13 பொதுமக்கள் பயணம் செய்த வாகனம் கொக்குப்படையானுக்கும் முள்ளிக்குளத்திற்கும் இடையில் பசுந்தென்றல் என்ற இடத்தில் வைத்தே கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் இத்தகவல்களை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டது.

ஆனால் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கிளைமோர் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்று படைத் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் பொதுமக்களை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல் எதனையும் நிகழ்த்தவில்லை. வெடித்தது எங்களுடைய கிளைமோர் அல்ல என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறினார்.

இடம்பெயர்ந்த பொதுமக்கள் பயணித்த வாகனத்தை இலக்குவைத்து கொக்குப் படையானுக்கும் முள்ளிக் குளத்துக்கும் இடையில் நேற்றுச் சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு இத்தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

தாக்குதல் நடந்த இடத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டபோது ஒருவர் உயிரிழந்தார். அவரது உடல் சிலாவத்துறை மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் வாகனத்தை முருங்கனில் உள்ள மல்வத்து ஓயாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மறித்து மன்னார் மருத்துவ மனைக்குச் செல்லமுடியாது என்று திருப்பி அனுப்பியுள்ளனர் என்று கூறப் பட்டது.

இதனையடுத்து மற்றொரு அம்புலன்ஸ் வாகனத்தின் மூலம் கரையோரப் பாதை ஊடாக காயமடைந்தவர்களை மன்னார் மருத்துவமனைக்கு அனுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

கொழும்பு,செப்.2

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சிகள் தயாராகிவருகின்றன.

அரச திணைக்களங்களில் இடம் பெற்று வரும் ஊழல், மோசடிகள், விலைவாசி உயர்வு ஆகியவற்றை முன்வைத்து இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட விருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அடுத்தவாரம் இந்தப் பிரேரணை கையளிக்கப்படும் என்றும் மாத நடுப் பகுதியில் நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறும் என்றும் எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் அதற்கு ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியதாகவும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க தெரிவித்தார். (அ-1)

## குடிசன மதிப்பீட்டுப் பணிகள் குடாநாட்டில் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.2

குடாநாட்டில் குடிசன மதிப்பீட்டுப் பணியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மீள முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணியில் ஈடுபடவிருப்பவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

குடிசன மதிப்பீட்டுப் பணியை முன்னெடுக்க சில மாதங்களுக்கு முன்னர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பொது அமைப்புக்களும் நாடாளுமன்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கருணா குழுவினர் ஆயுதங்களுடன் நடமாடத் தடை

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

கொழும்பு,செப்.2

கிழக்கில் - மட்டக்களப்பில் கருணா குழுவின் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடினால் கைது செய்யப்படுவர் என்று கண்டிப்பான உத்தரவு பொலீஸாரால் விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எச்.என்.பி.ஹேரத்தை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கருணா அணியின் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது. ஆயுதங்களுடன் நடமாடினால் கைது செய்யப்படுவார்கள்.

தமது அலுவலகங்கள் விடுதிகளில் ஆயுதங்களுடன் இருக்கலாம். வெளியில் திரிவதானால் ஆயுதங்கள் இன்றியே செல்லவேண்டும். (10ஆம் பக்கம் பார்க்க)

## 500 தொன் சீனி கப்பலில் வந்தது

யாழ்ப்பாணம்,செப்.2

குடாநாட்டுக்கு அவசரமாகத் தேவையான 500 மெற்றிக்தொன் சீனி உட்பட அத்தியாவசியப் பொருள்களுடன் 'றுகுணு' கப்பல் நேற்று காங்கேசன்துறை வந்து சேர்ந்தது.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி நேற்றே ஆரம்பமானதாகவும் சீனி இறக்கப்பட்டதும் மக்களுக்கு பங்கீட்டுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் அரிசி, உப்பு, பால்மா, மருந்துப் பொருள்கள், கட்டடப் பொருள்கள், விதை நெல், உரம் ஆகியனவும் எடுத்து வரப்பட்டுள்ளன. (அ-1)

## தொடர்ந்து 9 மணி நேரம் உரையாற்றிச் சாதனை!



உடுப்பிட்டி ,செப்.2

தொடர்ந்து 9 மணி நேரம் மகாபாரத உரையாற்றி சாதனை ஒன்றை நிலைநாட்டினார் 43 வயதான சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர்.

இந்து மறுமலர்ச்சி ஆதீனத்தின் முதல்வரான சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர் நேற்றுக்காலை 8.01. மணி தொடக்கம் பிற்பகல் 5.10 மணி வரை தொடர்ந்து 9 மணி நேரம் மகாபாரத இதிகாசம் குறித்து உரை நிகழ்த்தி புதிய சாதனையை நிலைநாட்டினார்.

வடமராட்சி அல்வாய் ஜெகதீஸ்வரம் ஆலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டனர்

பண்டிதர் எஸ்.தங்கவேலாயுதம் (10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் அமுக்கவெடியில் பஸ் சேதம்

மட்டக்களப்பு,செப்.2

மட்டக்களப்பு குறிஞ்சாமுனைப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணிக்கு அமுக்க வெடியில் சிக்கி போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று சேதமடைந்தது.

ஆனால் அதில் பயணம் செய்தவர்கள் காயம் ஏதும் இன்றித் தப்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு
### சாரதி தேவை

மேற்படி வெற்றிடத்திற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இரவு நேர அம்புலன்ஸ் சேவையில் கடமையாற்றுவதற்கு சாரதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் மாநகர சபையிலிருந்து 05 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களாக இருப்பது அவசியம்.

தகுந்த தகைமையுடையவர்கள் சுய விவரக் கோவையுடன் இரு உறவினரல்லாதவர்களின் நற்சான்றிதழ்களுடன் (ஒரு நற்சான்றிதழ் கிராம சேவையாளரிடமிருந்து பெறப்படல் வேண்டும்) அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை - 55 வயதுக்குட்பட்டவர்கள்
விண்ணப்பங்கள் யாவும் 08.09.2007 இற்கு முன் கிடைக்கத்தக்கதாக கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
இல. 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/53536)

## கண்ணீர் அஞ்சலி



எமது வங்கியின் உதவி
முகாமையாளராகவும் வாடிக்கையாளர்
சேவை முகாமையாளராகவும்
கடமையாற்றிய

### சின்னத்துரை சிவபாதம்

அவர்கள் நேற்று (01.09.2007) சனிக்கிழமை காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்,
இலங்கை வங்கி 2 ஆம் கிளை, யாழ்ப்பாணம். (சி/53534)

## மரண அறிவித்தல்கள்

### கண்ணதாசன் ரஜந்தன் (அன்பு)



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு, மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணதாசன் ரஜந்தன் 30.08.2007 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கண்ணதாசன் - ராதா தம்பதியினரின் அன்பு மகனும் இணுவில் இந்துக் கல்லூரி மாணவர்களான. ரஹிதா, ரஜீவன், ரவிதா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கண்ணதாசன்
(தந்தை).

மஞ்சத்தடி,
இணுவில் தெற்கு. (64443)

### திருமதி ராஜராஜிந்தினி குகேஸ்வரன் (வவா)



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜராஜிந்தினி குகேஸ்வரன்(வவா) 31.08.2007 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் குகேஸ்வரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செபமாலை மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும் சண்முகம் - தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் கர்சியா, யதுர்சன், ஆருசன்(மிது) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமுதலிங்கம்(இன்பம்), அருள்ராஜா(கனடா), ரவீந்திரராஜா(லண்டன்), சுகுணராஜா(லண்டன்), ராஜசேகர்(கனடா), ராஜறூபா (லண்டன்), ராஜறஞ்சினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இந்திரா, கேந்திரா(கனடா), ராகுலன்(லண்டன்), சமதி (லண்டன்), மகாதேவி(இந்தியா), மீனா(கனடா), தவராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: எஸ்.அமுதலிங்கம்
(இன்பம்- சகோதரன்)
தொ.பே. 077 4081749

வீரபத்திரகோயிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (64448)

### அண்ணாவியார்
### சின்னத்தம்பி தணிகாசலம்



**(கொழும்புத்துறை முத்துமாரி அம்மன் கோயில் தர்மகர்த்தா)**

கொழும்புத்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி தணிகாசலம் நேற்று(01.09.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாவி சின்னத்தம்பி - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளையின் அன்புக் கணவரும் மணிவர்ணபிள்ளை, சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆனந்தசுந்தரம், சண்முகசுந்தரம், சிவபாதசுந்தரம், யோகேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் தகப்பனாரும் மகாலட்சுமி, ராசம்மா, சாந்தா, பொன்னம்பலம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.09.2007) ஞாயிற்றுக்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன்னம்பலம்
(மருமகன்)

கொழும்புத்துறை. (64449)

## ஓட்டோ விற்பனைக்கு

NPGX - XXXX தொடரிலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்கு உண்டு. தனிப்பாவனையில் உள்ளது.
தொடர்புகளுக்கு:
43, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(பீற்றர் வீடியோ சென்ரர்)
T.P. : 077 6367924

## CD விற்பனை

இந்திய,மலேசிய தயாரிப்புகளான ஒரிஜினல் DVD, VCD, ACD, MP3, English D.V.D என்பன மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். நல்ல தெரிவுகளுக்கு முந்துங்கள்.

*தொடர்பு:*

**ஹரி வீடியோ லைபிரரி**
61, இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம்.

## விற்றுத் தீர்த்தல்

| | |
|---|---|
| 01) லாச்சிகளுடன் கூடிய மர, கண்ணாடி SHOW CASE | 8,500/= |
| 02) LENCO றெக்கோட் பிளேயர் | 4,000/= |
| 03) றெக்கோட்ஸ் L.P | 50/= |
| 04) றெக்கோட்ஸ் E.P | 30/= |
| 05) மாஸ்ரர் கசெற் | 120/= |
| 06) பழைய பாடல்கள் கசெற் (புதிய கசெற்றில்) | 100/= |
| 07) AKAI GXC 310 D - டெக் | 4,500/= |
| 08) DENON A.C.D பிளேயர் JAPAN | 3,000/= |
| 09) PANASONIC (JAPAN) வீடியோ பிளேயர் | 3,500/= |
| 10) SAMSUNG MP3- VCD CD பிளேயர் | 7,500/= |
| 11) TECHNICS ஈக்குலைசர் (JAPAN) | 8,000/= |
| 12) ஈக்குலைசர் (TAIWAN) (110v) | 5,500/= |
| 13) Nakamichdi கசெற் டெக் (110v) JAPAN | 4,000/= |
| 14) ஒருசோடி பொக்ஸ் (ஸ்பீக்கர் இன்றி) | 3,700/= |
| 15) ஒரு பொக்ஸ் பெரியது (ஸ்பீக்கர் இன்றி) | 3,000/= |
| 16) S.T.K ஸ்ரீறியோ அம்பிளிபயர் | 3,750/= |
| 17) ஒரு பொக்ஸ் (ஸ்பீக்கருடன்) | 3,000/= |
| 18) புதிய கோழிக் கூடு 4'x 3' | 4,000/= |

தொடர்பு: வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு.
T.P.: 0602214095 அல்லது
0777 247949 (64355)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜீவசுதன் தமிழ்ப்பிரியா



வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தமிழ்ப்பிரியா ஜீவசுதன் 30.08.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஜீவசுதனின் (National Institute of Social Development, Colombo) அன்பு மனைவியும் வீரசிங்கம் - முத்துலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பராசக்தி தம்பதியரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டக்கச்சியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு.ராம்சுந்தர் (மைத்துனர்)
932/21, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். 021 222 9503 (64446)

### திருமதி பொன்னுத்துரை அன்னலட்சுமி

**(தியாகி பொன் சிவகுமாரனின் தாயார்)**

உரும்பிராயைச் சேர்ந்த திருமதி பொன்னுத்துரை அன்னலட்சுமி நேற்று (01.09.2007) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியினரின் புத்திரியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை (அதிபர், சைவத்தமிழ் வித்தியாசாலை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற அரியரத்தினம்(பட்டணசபை, உரும்பிராய்) மற்றும் சிவசுப்பிரமணியம்(லண்டன்), சிவகுமாரி, சிவகுமாரன் (தியாகி), சிவயோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பராசக்தி, சற்குணராணி, கந்தையா, ஈஸ்வரி அம்மா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

திருமதி சி.கந்தையா
(மகள்).

NO. 5, INNER VANDERVERT PLACE,
DEHIWELA.
T.P.: [illegible] (64444)

## வாழ்த்துக்கள்



அடியேனை இரட்சிப்பிற்குள் வழி நடத்திய வரும், கல்வாரி தலைமைத்துவ பயிற்சி நிலையத்தின் விரிவுரையாளரும் எமது தேவாலயத்தின் நிறைவேற்று போதகருமான

### வி.கனகராசா

கொழும்பு இறையியல் கல்லூரியில் இறையியல் டிப்ளோமா (DIPLOMA IN THEOLOGY) பட்டத்தைப் பெற்றதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இவர் இறையியலில் மென்மேலும் பட்டங்கள் பெற ஆண்டவர் இயேசு கிருபையளிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றேன்.

இப்பட்டத்தைப் பெறும் சகோதரர் பா.துரைரத்தினம் அவர்களையும் இப் பாட நெறியில் இரண்டு பகுதிகளை பூர்த்திசெய்த எமது மூப்பர் கு.துரைரத்தினம் (றெஜி) அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

*அன்பின் சகோதரன்*
டானியல் இரகுநாதன். (64374)

## APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counsellors. This is a week-end (Saturday & Sunday) course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read,. write and understand
2. A pass in Advanced Level
3. Age between 25 and 50 years
4. Interested in social Activities

The applicants will have to buy the special application form at our office and submit them before the 8th of September. Only 25 applicants will be selected to follow this training.

For further details please contact:
"AHA VOLI" INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY
Affiliated to National University of Ireland, Galway
St.Patrick's Road, Jaffna.
T.P.: 222 2856 (64427)

## AMAZING UNBEATABLE

Three Years Service cum Partial Comprehensive Warranty

**UNISTA**
Intel Celeron D 2.66Ghz, Core 2 Support Main Board, 256Mb DDR2 Memory, 40Gb Hard disk, CDROM, Intr 64Mb VGA, 15" Digital Color Monitor, Keyboard, Mouse & Speaker
**1GB Flash Free** — Rs.42900/-

**UNIPRO**
Intel P 4 3.0Ghz / 2M, Intel 945 Chipset MainBoard, 512Mb King DDR2 Memory, 80Gb Hard disk , DVD/CD-RW, 15" LCD Monitor, Kb, Mouse & 980W 2.1 Woofer
**2GB Flash Free** — Rs.65900/-

**UNIDESK**
Intel Pentium 4 3.0Ghz/2M, Intel Original Mboard, 1 Gb King DDR2 Memory, 160Gb Hard disk 3.0Gbps DT Sata, 256Mb PCI Express(Offboard), DVDROM, DVD Multi Rw, 17" LCD Monitor, KB, Mouse, HP D1460 Deskjet Printer, Canon Scanjet LIDE 25 & 1400W 2.1 Woofer
**UPS Free** — Rs.104900/-

Your Favorite MNC Brands In Your Budget Cost

**IBM** Lenovo A55 | **HP** Pavillion PC

3 Years Comprehensive Warranty

வடமராட்சி மற்றும் தென்மராட்சியில் எமது சர்வீஸ் முகவர்கள் உள்ளனர்

ஏமாற்றத்தை தவிர்க்க முந்துங்கள்
More Offer for A/L Students

Buy from an Intel® Authorized Distributor

இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

**UNIT**
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
Ph:021-4590720

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களில் இரண்டாவது பரம்பரையைச் சேர்ந்தவர் வ.அ.இராசரத்தினம். கிழக்கிலங்கையின் மிக மூத்த எழுத்தாளர். அவர் எழுதிய



முதலாவது சிறுகதை 1950 ஒக்டோபரில் வெளிவந்தது.

சிறுகதைத்துறையில் தமது மின்னும் முத்திரையை பதித்திருந்தாலும் கவிதை, நாவல், நாடகம் ஆகிய துறைகளிலும் நிறைய எழுதியவர்.

''தோணி'' சிறுகதை இவருக்குச் சிறப்பு முத்திரை பதித்தது. அது ஈழகேசரியில் 1954இல் வெளி வந்தது. ஆங்கில, ரஷ்ய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. ''கொழு கொம்பு'' இவர் படைத்த பிரபல நாவல்.

இவர் தமது 76ஆவது வயதில் மறையும்வரை ஓயாது எழுதிக் கொண்டிருந்தவர்.•

''அன்னை'' மலையகத் தோட்டத் தொழிலாளியான தமிழ்ப் பெண் ஒருவரை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டது. கிழக்கின் மூத்த தமிழ் எழுத்தாளர் மலையகத் தமிழரின் வாழ்வை வெளிப்படுத்துகின்ற சிறப்பு இக்கதைக்கு உண்டு.

மலைய மக்களின் வாழ்க்கைப் புலத்தை கொண்டு புனையப்பட்ட 56 கதைகளின் தொகுப்பான ''உழைக்கப் பிறந்தவர்கள்'' நூலிலிருந்து இக்கதை மீள்பிரசுரம் செய்யப்படுகிறது.

# அன்னை

**கன்றின் குரலைக் கேட்டுக் கனிந்துவரும் பசுவைக் கண்டதும் அவளுக்குத் தன் குழந்தை நினைவு வந்துவிட்டது பசுவுக்குள்ள சுதந்திரம் தனக்கு இல்லையா என்று அவள் எண்ணியதன் பலன் வேறாக அமைந்துவிட்டது**

வரை வரையாய் மடிப்பு மடிப்பாய் தொடர்ந்து செல்லும் மலைத்தொடர்களையும், அந்த மலைகளிலே நெடிதுயர்ந்து பக்கவாட்டில் குறுகலாய்க் கிளைத்து நிற்கும் சவுக்கந் தோப்புகளையும் மலைச் சரிவுகளிலே நிரைத்து நிற்கும் சீமைக்கிழுவை மரங்களின் தண் நிழலிலே குத்துக் குத்தாய்ச் சடைத்துச் செழித்து நிற்கும் தேயிலைப் புதர்களையும் மலைமுகட்டிலே சதா இரைந்து கொண்டு கம்பீரமாக உயர்ந்து நிற்கும் தொழிற்சாலையையும், அடிவாரத்திலே கல்லுக்குக் கல், கலீர் கலீர் என்று குதித்துப் பெதும்பைப் பெண்ணைப் போலக் கும்மாளமடித்துக்கொண்டு செல்லும் மலையருவியையும் இயற்கையையும் செயற்கையையும் எதையும் எல்லாவற்றையும் மெல்லிய சாம்பற் பொடியைப் போன்ற பனிமூட்டம் தன்னுள் அடக்கிப் படர்ந்து கிடந்தது.

கொட்டும் பனியில் சுற்றுப் புறமே செயல் இழந்து விறைத்து மோனத்தவம் செய்துகொண்டிருக்கையில், அந்த மகா மசான அமைதியைக் குலைக்கத் திராணி அற்றவர்களாக மனித ஜீவன்கள் நடந்துகொண்டிருந்தன. வாழவேண்டும் என்ற துடிப்பு, வாழ்ந்தே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கையில் குளிர் என்ன ஒரு பொருட்டா?

அவர்கள் நடந்துகொண்டிருந்தார்கள். பனிமூட்டத்தில் முன்னால் செல்பவரைத் தெரியவில்லை; பின்னால் வந்து கொண்டிருந்தவரை அறிய அவகாசம் கிடையாது. அந்த மனிதர்கள் வேகமாக நடந்தார்கள். அசமந்து கிடக்கும் இயற்கையை வெல்லாவிட்டால் அவர்கள் என்ன மனிதர்களா? வேகமாகவே அவர்கள் நடந்தார்கள்.

பனியில் இளகிப் போயிருந்த அவர்கள் பாதங்களில் ஊசி போன்ற சரளைக் கற்கள் குத்துகையில், குளிரைப் போக்கடிக்கும் இதமான வேதனையோடு வீரம்மாவும் நடந்துகொண்டிருந்தாள். கந்தைத் துணிகளிலே சுற்றியிருக்கும், மாமிசத் துண்டம் போன்றிருந்த பச்சைக் குழந்தையைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு அவள் நடந்தாள்.

கற்கள் பதித்த அந்த ராஜபாட்டை, அதோ மலையுச்சியில் இருக்கும் தொழிற்சாலைக்குச் செல்கிறது. வீரம்மா அந்த பாதையிலிருந்து விலகி, மலைச்சரிவிலே இறங்கத் தொடங்கினாள். வறட்சியை என்றைக்குமே காணாச் செழிப்போடு நிமிர்ந்து நிற்கும் புற்கள், மனிதச் சுவடுகளின் அழுத்தத்தால், ஒடுக்கப்பட்ட மக்களின் தாழ்வு மனப்பான்மையோடு தலைகுனிந்து நிலத்தில் அமிழ்ந்து மடிந்து கிடந்ததினால் ஒற்றையடிப் பாதை என்ற பெயரைச் சுமந்து கொண்டு நின்ற அந்தத் தடத்திலே, வழுக்கி விழாமல் இருப்பதற்காகத் தன் கால் பெருவிரல்களால் நிலத்தில் வலுவாக ஊன்றிக் கொளுவிக்கொண்டு மெதுவாக அவள் இறங்கினாள்.

தலைப்பிரசவத்தின் பின்னர் ஏற்பட்ட அதிர்ச்சியினால் கொடுக வைக்கும் குளிரில் கூட வீரம்மாவின் முகத்தில் வியர்வை முத்துக்கள் அரும்பியிருந்தன. மலைநாட்டு நாவற்பழம் போலச் சிவப்பாகக் கணந்து நுனியில் சற்றுமேல் நோக்கி விரிந்திருந்த அவள் நாசித் துவாரங்கள், கொட்டும் பனியில் கரகரத்தன. குவிந்த மேலுதட்டின் மேலே நாசித் துவாரத்தின் அடியில் ஊசிக் குத்தல் போன்ற பனி தாக்குகையில் பசையற்ற பனிநீர் ஒழுகிக்கொண்டிருந்தது. அதைத் துடைக்கமாட்டாதவளாக, வீரம்மா மெல்ல மெல்ல இறங்கிக் கொண்டிருந்தாள்.

அப்படியாக அவள் இறங்கிக்கொண்டிருக்கையில் வலதுகால் பெருவிரல் இடுக்கில் சுரீர் என்றது. தன் குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டே வீரம்மா குனிந்து பார்த்தாள். தன் உடலில் மிஞ்சியிருந்த இரத்தம் முழுவதையுமே குடித்த புல்லட்டை கொழுத்துப் பருத்து, உழுந்து வடையைப் போல விரல் இடுக்கில் வளைந்து கிடந்தது. அதற்காகவென்றே வாய்க்குள் இடுக்கித் தயாராக வைத்திருக்கும் யாழ்ப்பாணப் புகையிலையின் சாற்றைக் குனிந்து துப்பமுடியாமல், வலியைப் பல்லைக் கடித்துத் தாங்கிக்கொண்டு வீரம்மா விரைவாக இறங்கினாள்.

★★★

மலையடிவாரத்திலிருந்த பிள்ளை மடுவத்தை அடைந்தாயிற்று. பிள்ளை மடுவமா? என்ன, மாட்டுத் தொழுவம் என்பது போல ஒலிக்கிறதே என்று கேட்கிறீர்களா? பெயரில் என்ன இருக்கிறது? சந்தேகமே கிடையாது. அந்த மடுவத்திலே மனிதப் பிஞ்சுகள் தாம் இருக்கின்றன. இலங்கையின் தேசிய வருமானத்தில் செம்பாதிக்கு மேல் ஈட்டிக் கொடுக்கும் தேயிலைத் தோட்டங்களே ஓர் அபூர்வமான உலகம். நீங்கள் தின்றது செரிக்கக் கதை படிக்கும் வாசகர்களாக இருந்தால், தயவுசெய்து அந்த உலகத்துக்கு வராதீர்கள். அப்படிக் கேட்காமல், வருகிறோம் என்ற அடம் பிடித்தீர்களானால், இதோ 'பிள்ளை மடுவம்' இருக்கிறது பாருங்கள்.

முப்பதடிக்கு இருபதடிச் சதுரமான தகரம் வேய்ந்த கொட்டில். மழை வந்தால்தான் கூரை முகட்டில் ஒழுகும். இல்லாவிட்டால் ஒழுகாது! மூன்று வயசுள்ள துடியான பையன் ஏறிக்கொண்டு வெளியே ஓடிவிடாமல் இருக்கும் படியான உயரத்திற்குச் சுவர் இருக்கிறது. பிள்ளைகள், கிருஷ்ணாவதாரம் எடுத்த காரணமாகச் சுவரில் குண்டு குண்டாக மண்ணைக் காணவில்லை. சுவருக்கு மேலே உள்ள திறந்த வெளியினூடாகச் சீறியடிக்கும் ஊதற்காற்றும் மழையும் தங்குதடையின்றி உள்ளே வரும். இந்த திவ்விய க்ஷேத்திரத்தில் தான் அந்தப் பெரியதோட்டம் முழுவதுமுள்ள தொழிலாளர்களின் மூன்று வயசுக்குட்பட்ட குழந்தைகள் எல்லாம் நாளைக்கு ஏழெட்டு மணி நேரத்துக்கு அடைந்து கிடக்கவேண்டும். ஆச்சரியமாக இருக்கிறதா?

நவீன கால அரசியல் எத்தனையோ அநாமதேயங்களைத் தியாகிகள் ஆக்கியிருக்கிறது. ஆனால் தியாகம் என்ற வார்த்தையின் பொருளை அறியாமலே இந்தப் பாட்டாளிக் குழந்தைகள் தங்கள் பெற்றோரின் வயிற்றுச் சோற்றுக்காகத் தியாகம் பண்ணுகின்றன, தந்தையும் தாயும், வயசு வந்த சகோதர சகோதரிகளும் வேலைக்குச் சென்றபின் அந்த மடுவத்திலே குழந்தைகள் தம்மைத் தாமே தியாகம் செய்துகொண்டு விழித்திருக்கின்றன; பசித்திருக்கின்றன.

மனித உபாதைகளைத் தாங்கிக்கொண்டும், இயல்பூக்கங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டும் அந்தக் கொட்டிலிலே அடைபட்டுக் கிடந்து வயசு வந்ததும் பிறருக்கு உழைத்துக் கொடுப்பதற்காக இப்போதே தங்களைத் தயார் செய்து கொள்கின்றன.

வீரம்மா அந்த மடுவத்தை அடைந்துவிட்டாள். அவளுக்கு முன்னால் ஏற்கனவே பத்துப் பதினைந்து தாய்மார், தங்கள் குழந்தைகளை அங்கே விட்டுச் சென்றிருந்தார்கள்.

பிள்ளை மடுவத்து வாயிலில் கால் வைத்த வீரம்மா, துணிகளால் போர்த்திருந்த தன் குழந்தையை வெறியோடு முத்தமிட்டாள்.

''சத்த வெலகு புள்ள'' - வீரம்மாவிற்குப் பின்னால் வந்த பேரிளம் பெண் ஒருத்தி எரிச்சலோடு குரல் கொடுத்தாள். வீரம்மா ஒதுங்கினாள். கையில் பிடித்து இழுத்து வந்த மூன்று வயசுப் பையனைக் கழுத்தைப் பிடித்து உள்ளே தள்ளிவிட்டு அந்தப் பேரிளம் பெண் வெறுப்போடு திரும்பிக்கொண்டு நடந்தாள்.

தள்ளிவிட்ட பையன், தன் தாயை முந்திக்கொண்டு ஓடிப் போய் அவள் முந்தானையைப் பிடித்துக்கொண்டே, ''நானும் வாறன் அம்மா'' என்று அழுதான்.

''போடா கழுதை'' என்று அவன் முதுகில் 'இரண்டு' போட்டு, அவன் காதைப் பிடித்து இழுத்து வந்து, திரும்பவும் மடுவத்துள் தள்ளினாள் அந்தப் பெண்.

''கொழந்தைக்கு அடிக்கிறீங்களே, அம்மா'' என்று வீரம்மா அனுதாபத்தோடு கேட்டாள் அந்தப் பெண்ணிடம்.

''கொழந்தையா அது. கோட்டான், பிசாசு...'' என்ற அந்தப் பெண் அர்ச்சனை செய்கையில் பையன் திரும்பவும் தன் தாயிடம் வந்துவிட்டான். அவன் உச்சந் தலையில் 'நக்'கென்று குட்டி அவனை உள்ளே தள்ளிவிட்டுத் தன்பாட்டில் திரும்பிக்கொண்டு நடந்தாள் அந்தப் பெண்.

ஒதுங்கி நின்றிருந்த வீரம்மா, பேய்க்கனவு கண்டு பயந்தவளைப் போல, 'ஐயோ' என்று சத்தமிட்டாள். பிரக்ஞை வந்தபோது மீண்டும் வெறியோடு தன் குழந்தையைத் திரும்பத் திரும்ப, திரும்பத் திரும்ப முத்தமிட்டாள்.

அதிகாலையில் மங்கலான விடிவிளக்கின் தெளிவற்ற ஒளியில் தன் கைகளையும் கால்களையும் உதைத்துக்கொண்டு சிரித்தபோதும் வீரம்மா தன் குழந்தையை முத்தமிட்டாள். பின்னர், ''தம்பியப் பாத்துக்குங்க'' என்று புரண்டு படுக்கும் தன் கணவனுக்கு 'ஆக்ஞை' பிறப்பித்துவிட்டுப் பரபரவென்று அடுப்பை மூட்டிவிட்டு உலையை ஏற்றிய இடைநேரத்திலும் தன் குழந்தையை முத்தமிட்டாள். அதன் பின்னால் தன் கணவன் பழையதைச் சாப்பிடுகையிலும் மடியில் இருந்த தன் குழந்தையை முத்தமிட்டிருக்கிறாள். அதற்குப் பிறகு, ஆசையாகத் தைத்த கம்பளிச் சட்டையைக் குழந்தைக்கு அணிவித்து, வீடு என்ற 'லயத்தை' விட்டுப் புறப்பட்டபோதும் முத்தமிட்டிருக்கிறாள். ஆனால் இப்போது?

இப்போது அவளுக்கு வெறி! தன் கண்மணியைச் சில மணி நேரம் பிரியப் போகிறோமே என்ற வேதனையில் ஏற்பட்ட வெறி! அவளது போதை முத்தங்களைத் தாங்காமல் குழந்தை திணறிற்று.

''கண்டறியாத புள்ளயை பெத்திட்டா. சும்மா போட்டிற்கு வருவியா? நேரமாச்சல்லே'' - பின்னால் வந்த இன்னொருத்தி வீரம்மாவைப் பார்த்தும் பார்க்காததுமாகச் சொல்லிவிட்டு, தன் தோளில் முகத்தை இடித்துக்கொண்டு வெறுப்போடு நடந்தாள்.

வீரம்மா சிமெண்ட் தரையில் தன் குழந்தையைக் கிடத்திவிட்டு மறுபடியும் முத்தமிட்டாள். தோலைப் பிய்த்துக்கொண்டு பிதுங்கும் ரம்புட்டான் பழங்களைப் போல அவள் கண்கள், கண்ணீர்த் திரைக்குள் சதைப் பிண்டமாய் வெளிறிக் கசிந்தன.

கண்களை முந்தானையால் துடைத்தபடியே, வீரம்மா பிள்ளை மடுவத்தை மேற்பார்வை செய்யும் கிழவியை அணுகித் தலைப்பில் முடிந்து வைத்திருந்த ஒரு ரூபாய்த் தாளை அவள் கைகளில் திணித்தாள். ''அம்மா எங் கொழந்த ஒங்க அடைக்கலம்'' என்று அவள் சொல்லும்போது வீரம்மாவின் கண்கள் கண்ணீரை வழியவிட்டன. வீரம்மா சொல்லியதைக் காதில் போட்டுக்கொண்ட அந்தச் செவிட்டுக் கிழவி, ''நீ போம்மா நான் பார்த்துக்கிறேன்'' என்று சிரித்தாள். ஒரு ரூபாய் வாங்கியிருக்கிறாள் அல்லவா? சிரிக்க மாட்டாளா?

இதற்குள் ஆலைச் சங்கு ஊதியது. வீரம்மா கடைசி முறையாகத் தன் குழந்தையை முத்தமிட்டு விட்டு ஆலையை நோக்கி ஓடினாள். அப்பொழுது பெருவிரல் இடுக்கிலே இரத்தங் குடித்துக் கொழுத்திருந்த அட்டை கீழே விழுந்தது அவளுக்குத் தெரியாது.

'செக்ரோலில்' பெயரைப் பதிந்துவிட்ட வீரம்மா கொழுந்துக் கூடைய எடுத்துத் தலையில் முதுகுப் புறமாக தொங்கவிட்டுக் கொண்டு நடந்தாள்.

★★★

இப்போது [illegible]

தோப்புகளின் பின்னால் காலைக் கதிரவன் தன் பரிபூர்ண பிரபையோடு ஊசிக்கிரணங்களைச் செலுத்துகையில் அந்தப் பிரதேசமே சுறுசுறுப்படையத் தொடங்கிற்று.

வீரம்மா தன் சக தொழிலாளிகளோடு கூடையைச் சுமந்து கொண்டு மலை முகட்டில் ஏறத் தொடங்கினாள். பதினொரு மணிக்கிடையில் இருபத்தைந்து ராத்தல் கொழுந்துகளைப் பறித்து விட்டால் அன்றைக்குப் 'பெயர்விழுந்து' விடும். அதன் பிறகு மகனைத் தூக்கிக் கொஞ்சலாம்; வீட்டுக்குச் சென்று....

சிந்தனை வேகமானதுதான். ஆனால் அதைவிட வேகமாக அவள் கைகள் வேலை செய்தன. புல் நுனியிலே நெளிந்து தெரிக்கும் அட்டையைப் போல, அவள் விரல்கள் தேயிலைச் செடிகளிலே நெளிந்தன. பெருவிரலும் சுட்டுவிரலும் கம்பங் கூத்தாடியின் தாள லயத்தோடும் சமனத்தோடும், இரண்டு தளிர்களும் ஒரு மொட்டுமாய், கணநேரத்தில் கைகள் நிறையப் பின்னாலிருக்கும் கூடையும் நிறைந்தது. பத்துமணி ஆவதற்குள் வீரம்மா ஏறத்தாழ முக்கால் கூடையை நிரப்பிவிட்டாள்; மழை கொட்டத் தொடங்கியது.

மழைதானோ! மலைநாட்டில் அதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. நினையாப் பிரகாரமாய்க் கொட்டும். அந்தத் தொழிலாளர்களை கொட்டும் மழை ஒன்றும் பாதிக்காது. ஆனால் சோனாவாரியான அந்த மழை வீரம்மாளின் வேலையைக் கொஞ்சம் தடுக்கவே தடுத்தது. ஊதற்காற்றோடு மழை சீறி அடிக்கையில், பாவம், வீரம்மா நடுங்கினாள். இந்த மழை முழுவதுமே மடுவத்தில் இருக்கும் தன் பச்சைக் குழந்தையின் மேல் வாரி அடிப்பதாக அவளுக்கு ஓர் எண்ணம். வீரம்மாவின் விரல்கள் செயலிழந்து நின்றன.

குடைக்குள் நின்ற கங்காணி அகாரணமாக எல்லாத் தொழிலாளர்களையுமே கீழ்த்தரமான பாஷையில் பேசினான். வீரம்மா திரும்பவும் கொழுந்து கிள்ளத் தொடங்கினாள். ஆனாலும் ஒரு தயக்கம்.

மழை விட்டுவிட்டது.

★★★

கூடை நிரம்பிக்கொண்டு வந்தது. கொழுந்து கிள்ளும் தொழிலாளிப் பெண்கள் இப்போது கண்டிராக்டரின் பங்களாவைச் சமீபித்து விட்டார்கள்.

வீரம்மா வெகு வேகமாகக் கொழுந்து கிள்ளிக் கொண்டிருக்கிறாள்.

'அம்மாவ்'

கண்டிராக்டரின் வீட்டுத் தொழுவத்திலிருந்த பசுங்கன்று கத்தியது. எங்கிருந்தோ தாய்ப்பசு பதறிக்கொண்டே ஓடிவந்து கன்றுக்குப் பாலூட்டியது. வீரம்மா தன்னை மறந்து அந்தப் பசுங்கன்றைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பசுவுக்குக்கூடத் தான் நினைத்தபோது கன்றுக் குப் பால் கொடுக்கச் சுதந்திரம் இருக்கிறது. ஆனால் தனக்கு...

வீரம்மா இப்படி எண்ணினாளோ என்னவோ; பாலூட்டும் பசுவையே பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அவள் நெஞ்செல்லாம் வலித்தது. கட்டமைந்த மார்பு விம்மிப் புடைத்துக் கனத்தது. ஊமைப் புண்ணின் நமைச்சல் போல முலைக்காம்புகள் அரித்தன. அந்த அரிப்பின் வேதனையைத் தாங்கமுடியாதவாறு வீரம்மா தேயிலைச் செடியின் கிளையைத் தன் பலங்கொண்ட மட்டும் இறுகப் பிடித்தபோது, செடியின் கிளைகள் 'சடார்' என்று ஒடிந்தன. முலைக்காம்பின் கீழே மார்புச் சட்டைகள் நனைந்து...

வீரம்மா பைத்தியக்காரியைப் போலத் தலை தெறிக்கப் பிள்ளை மடுவத்தை நோக்கி ஓடினாள்.

★★★

பிள்ளை மடுவத்திலே, சிறுநீரிலே தெப்பமாக நனைந்து கிடக்கும் தன் குழந்தைக்குப் பாலூட்டுகையில் இரண்டு ராத்தல் கொழுந்து குறைவாக இருந்ததனால் அன்றைக்குத் தனக்குச் 'செக்ரோ'லில், 'பேர் விழவில்லை' என்ற செய்தி வீரம்மாவுக்குத் தெரியாது. ★

(1959)


பரதநாட்டிய அரங்கேற்றம்



பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இன்று
நடைபெறும் எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய
பிரபல தொழிலதிபர்
முருகேசு குணரத்தினம் அவர்களின் செல்வப் புதல்வி
**செல்வி தயாந்திகா**
அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்புற நடைபெற
எல்லாம் வல்ல நல்லூர் கந்தனதும்,
செல்வச் சந்நிதியானினதும் அருளும் ஆசியும்
கிடைக்கப்பெற வடமராட்சி வாழ் வர்த்தகர்கள்
சார்பில் எமது நல்வாழ்த்துக்கள்.


(J/53551)

**நெல்லை சில்க்,** நெல்லியடி.

**ஜெயகணேஷா ஸ்ரோர்ஸ்,** பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலிகள்...



## அருட்பணி பஸ்ரியாம்பிள்ளை பிரான்சிஸ் பொனிபஸ்

அன்பென்றால் -இனிய நண்பனாய்
ஆன்மீகத்தில் பொழியும்
-அருட்குருவாய்
நோய்என்றால் போக்கும் தெய்வீக
மருத்துவராய்
எம்தேவைகளில் -உற்றஉறவினராய்
எல்லாமாய் எம் உள்ளங்களில்-
நிறைந்த
அன்புத் தந்தைக்கு!
எம் இதய அஞ்சலிகள்!!

புனித யாகப்பர் ஆலயம்,
சில்லாலை. (64414)

பங்குத்தந்தையும்
பங்குமக்களும்.

# ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 ★ 10 ★ 1939



இறப்பு 13 ★ 09 ★ 2006

## சின்னத்தம்பி அன்னம்மா

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.
(64211)

தகவல்:
இராசேந்திரம் (மகன்),
பத்மாவதி (மருமகள்-ரதி),
துசியந்தி, துஷானா, தீபன் (இத்தாலி),
கிருஷன், பத்மதிரீஷா (பூட்டப்பிள்ளைகள்).

# மரண அறிவித்தல்கள்

## முத்துவேலு பத்மாவதி

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்துவேலு பத்மாவதி 31.08.2007அன்று காலமானார்.

அன்னார் இணுவில் மேற்கைச்சேர்ந்த அமரர்களான முத்துவேலு-செல்லம்மா தம்பதியரின்அன்புமகளும் காலஞ்சென்ற திருமதி கனகம்மா கந்தையாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சி.கந்தையாவின் (இளைப்பாறிய ஆசிரியர்) மைத்துனியும் காலஞ்சென்ற கருணானந்தன் (இராசா) மற்றும் சதானந்தன் (வவா, உரிமையாளர் சரஸ்வதி டிறேடிங்ஸ், 19,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), ஆனந்தபாஸ்கரன் (கனடா), ஆனந்த கேதீஸ்வரன் (ஈசன்), திருமதி வித்தியானந்தநங்கை யோகேந்திரன்(சுவிஸ்), திருமதி சத்தியானந்தநங்கை ஜெயக் குமார் (பிரான்ஸ்), சத்தியானந்தன் ஆகியோரின் சிறியதாயும் விக்னேஸ்வரிதேவி, மீனலோசனி, பாமினி (கனடா),சிவனேஸ்வரி, யோகேந்திரன் (சுவிஸ்),ஜெயக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் சசிகரன்(கனடா), ரஜீவ்கரன், தனுசியா, யாழினி, சர்மினி, சுகாசினி(கனடா), இந்துஜா(சுவிஸ்) ,சோபிதா, ஜெனித்தா(பிரான்ஸ்)ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று(02.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பூவோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஆனந்த வாசம்',
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
க.சதானந்தன் (வவா).



## பரமலிங்கம் ஸ்ரீதரன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ், பரீஸை வசிப்பிடமாகவும் கொண்ட பரமலிங்கம் ஸ்ரீதரன் 30.08.2007 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் லலிதாவின் (France) அன்புக் கணவரும் பரமலிங்கம் (நயினாதீவு), காலஞ்சென்ற இராசரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் வைத்திலிங்கம் - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் லுவியா, தமிழினி, செபஸ்தினி, லாவண்ஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீவனின் அன்பு மாமனும் புஸ்பவதியின் (London) பெறாமகனும் புஸ்பராசாவின் (France) மருமகனும் திருமலர் (இந்தியா), கலைமகள், வசந்தகுமார் (கிராம உத்தியோகத்தர், கோண்டாவில்), ஜெயந்திமாலா, கதிர்(France), வன்னியசேகரன், Dr.சத்தியகுமார், கலையரசி, ஜெயக்குமார் (S.So-வவுனியா), உதயகுமார் (A.C.C.D. office Jaffna) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலா (ஆசிரியை யா/இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை) ஞானமலர், கமலாதேவி (France), நித்தியதர்மகுமார் (London), பிறேம்குமார் (France) மதியழகி (France), கிருஷ்ணபவானி(London) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.09.2007 செவ்வாய்க்கிழமை மாலை France இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்
(64424)

தகவல்:
வ.பரமலிங்கம் (தந்தை).
ப.வசந்தகுமார் (கிராம உத்தியோகத்தர், கோண்டாவில்).
சு.சிவலிங்கம் (மைத்துனர்).

# மணமகள் தேவை

லண்டனில் P.R உடைய 1981 ஆம் ஆண்டு பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.3004, மே/ப உதயன், யாழ்ப்பாணம். [64192]

# விற்பனைக்கு

4 மாத கலப்பு நல்லின ஊர்ச்சேவல், பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு. தர்மச்சந்திரன், அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி.
T.P.: 077 6258191, 077 6086140. (64215)

# ஓடுகள் தேவை

நல்ல நிலையில் உள்ள பாவித்த ஓடுகள் தேவை. **39, பிறவுண் வீதி, நீராவியடிப் பிள்ளையார் கோயில்.**
T.P.: 2390 (64417)

# உடன் விற்பனைக்கு

MD -XXXXதொடர் இலக்கமுடைய TVS GLX 125 CC Motor Cycle உம், 1000 CC EN - XXXX தொடர் இலக்கமுடைய Morris Minor காரும் உடன் விற்பனைக்கு.
(சி/53526) தொடர்பு: 0777 252015

# தவறிவிட்டது

வறுத்தலை, விளான், தெல்லிப்பழையைச் சேர்ந்த ரகுநாதன் லதா என்பவருடைய தே.அ.அட்டை (737103048V), விசேட அ.அட்டை என்பன தொண்டைமானாறு சந்நிதி ஆலயத்துக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் தெற்கு, யோகபுரம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (64428)

# பந்தல் விற்பனைக்கு

சொக்கட்டான் பந்தல் அதனுடன் கூடிய சமையல் பாத்திரங்கள், சில்வர் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
சீ.ஞானசேகரம், பலாலி வீதி, (பெற்றோல்செற் முன்பாக),
உரும்பிராய்.
T.P.:5090504
(64406)

# உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் 2 கடைகளும் யாழ்.பிறவுண் வீதியில் 2 பரப்பு அமைந்த காணியும் வீடும் யாழ். கஸ்தூரியார் வீதியில் பாரதி ஸ்டியோவுக்கு அண்மையில் உள்ள கடை வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.
தொடர்பு: **இ.யோகநாதன் ,
194/5, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.**
T.P.:0775245862
(64439)

வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு
(இலவச வெளியீடு)

# வெளியீட்டு விழா

நூலாசிரியர்: **க.பேரம்பலம்**
(ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்).
காலம்: **இன்று (02.09.2007)
ஞாயிறு காலை 9 மணி**
இடம்: **கொடிகாமம் திருநாவுக்கரசு
மகா வித்தியாலயம்.**
★ யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
-நூல்வெளியீட்டு விழாக்குழுவினர்.
(64426)

நல்லூர் கந்தசுவாமி ஆலய
வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டும்
அதனைத் தொடர்ந்தும்

## ஸ்ரீலங்கா புத்தகசாலையின்

மாபெரும் புத்தகக் கண்காட்சியும்
விற்பனையும்

தரம் ஒன்று தொடக்கம் க.பொ.த.உ/த. வரையான சகல பாடங்களுக்குமுரிய தமிழ், ஆங்கில, சிங்கள பாடநூல்கள், பயிற்சிப் புத்தகங்கள், செயல்நூல்கள் மற்றும் பல்கலைக் கழக மாணர்களுக்குரிய பாடநூல்கள், இந்திய எழுத்தாளர்களின் அனைத்து வெளியீடுகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இடம்:- **NO.14, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.** (சி/53465)

# மரண அறிவித்தல்

## குமாரசேகரம் சிவமைந்தன்

உரும்பிராய் வடக்கு, உடையார் வளவைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்டவருமான குமாரசேகரம் சிவமைந்தன் பிரான்ஸில் 31.08.2007 அன்று காலமானார்.

அன்னார் அமரர் குமாரசேகரம் - பரிமளம் தம்பதியரின் அன்பு மகனும் விஜயா, கிரிஜா, சிவபாலன், சோமகுமரன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
T.P.:011 2366978 83, 2/4, ... லேன்,
வெள்ளவத்தை.
(சி/53532)

# தவறிவிட்டது

எனது தேசிய அடையாள அட்டை (421141312V), விசேட அடையாள அட்டை (0906015086), மோட்டார் வாகன (500-8205), பதிவுப்புத்தகம், காப்புறுதிச்சான்றிதழ், வரிப்பத்திரம், சாரதிஅனுமதிப் பத்திரம் என்பன 31.08.2007 வெள்ளிக்கிழமை கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலய வளாகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தா.அரிகரசுப்பிரமணியக்குருக்கள், கண்ணகை அம்மன் கோயில், இணுவில் .
தொ.பே.இல. 222 2660
(64430) (64430)

# அதிசய சிகிச்சைமுறை
# யோகம் தரும் இயற்கை வைத்தியம்

இயற்கை வைத்திய முறை பிரானச் சிகிச்சை. வர்மப்புள்ளிகள்
அழுத்தம் நரம்புகள் நாளங்கள் தடை நீக்கம்
தண்ணீர் மருந்தாக அருந்துதல் உளவியல் சமப்படுத்துதல்

★ கை, கால், தலைவிறைப்பு ★ வாதம் ★ மூட்டு வலி ★ தசைப்பிடிப்பு ★மூட்டுக்கள் நோ ★ நீண்டநாள் நித்திரை இல்லாமை ★ கைகால் நடுக்கம் ★கழுத்துப் பிடிப்பு ★ இடுப்பு வலி ★ சிக்கின் குனியா வீக்கம் வலி, இழுப்பு மூச்சுத் திணறல் மற்றும் பழைய நோக்கள் உள்ளவர்களும் மருந்துகள் பயனளிக்காதவர்களும் நேரில் தொடர்புகொள்ளவும்.

**ஆலோசனை இலவசம்:**

தொ.பே. 0779112969,
0776244880. (64085)

யோக மருத்துவம்,
சாரையடி, பருத்தித்துறை.

# கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை பங்கிலே பணிபுரிந்து பங்கு மக்களை நன்னெறியில் வழிநடத்தி பற்பல தேவைகளை அந்தோனியார்பதிக்கு செய்து வரலாற்று நாயகர்களாகத் திகழ்ந்து வந்த எமது முன்னாள் பங்குத்தந்தையர்களாகிய

* **அருட்திரு.P.M.இம்மனுவேல்**
* **அருட்திரு.B.F.பொனிபஸ்**

ஆகிய இருவரினுடைய மறைவினால் ஆழ்ந்த துயரடைவதோடு அவர்களின் நித்தியவாழ்வுக்கு இறைவனை வேண்டி கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

* 04.09.2007 செவ்வாய்க்கிழமை இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**புனித அந்தோனியார் ஆலய சமூகம்,
பருத்தித்துறை.** (சி/53525)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 - 06 - 1957



ஆண்டவன் பாதங்களில் 02 - 08 - 2007

## அமரர் சின்னத்தம்பி மோகனதாஸ்

மின்னாமல் முழங்காமல் சொல்லாமல்
எங்கு சென்றாய் சோதரனே!
உன் பிரிவுத்துயர் தாங்கமுடியவில்லையே
எங்கு காண்போம் உன்முகத்தை
எங்கு கேட்போம் உன் குரலை
எங்களை ஏமாற்றிவிட்டு அன்னையுடன் வாழப்
பறந்து சென்றுவிட்டாயோ!

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

70/6, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (64071)

உன்பிரிவால் வாடும்:
சகோதரர்கள்,

# 31ஆம் நாள் நினைவுதின அழைப்பு

உதிர்வு 10 * 10 * 1935



மறைவு 03 * 08 * 2007

## திருமதி செல்லத்துரை பாக்கியம்

சுழிபுரம் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற சி.செல்லத்துரையின் (தண்ணிச்சாமி) அன்பு மனைவியுமான பாக்கியம் 03.08.2007இல் சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசி மூலம் அநுதாபம் தெரிவித்தோருக்கும், பலவழிகளில் உதவிகள் புரிந்தசகலருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று 02.09.2007 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம். (64350)

பிரபு, குணம் (மக்கள்),
சியாமளா, கிருபாஜினி (மருமக்கள்),
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் இல்லை, வருமானமில்லை புலம் பெயர்ந்தோர் உதவியில் காலம் தள்ளும் வறிய மக்கள்

*(நயினாதீவில் இன்றைய வாழ்க்கை நிலை பற்றி அங்கு சமீபத்தில் சென்று திரும்பிய நமது பிரதிநிதி பின்வரும் விவரங்களைத் தந்துள்ளார்.)*

நயினாதீவில் ரியூசன் வகுப்புகள் நடைபெறுகின்றன: அதற்காக மாணவர்கள் எந்தவிதக் கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை. பிரிட்டனிலுள்ள நயினாதீவைச் சேர்ந்த மக்கள் தீவின் மாணவர்கள் பெறும் கல்விக்கான செலவுகளை ஏற்றுக்கொள்கின்றார்கள். நயினாதீவில் கற்பிக்கும் வெளியூர் ஆசிரியர்கள், உள்ளூர் ஆசிரியர்களுடன் இணைத்து பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களிலும் மேலதிக வகுப்புகளை நடத்துவது பாராட்டக்கூடியதாய் இருக்கின்றது. இவர்களுக்கான கொடுப்பனவுகள் வெளியூரில் இருந்து கிடைக்கின்றன.

உங்கள் வாழ்க்கை எப்படி போகின்றது என்று சில 7 ஆம் ஆண்டு மாணவர்களைக் கேட்டேன்.

உள்ளூர் வெளியூர் ஆசிரியர்கள் எங்கள் கல்வியில் அக்கறைகொண்டு படிப்பையும் விளையாட்டுக்களையும் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று தெரிவித்த அவர்கள் பாடப் புத்தகங்கள், கற்றல் உபகரணங் களுக்கு தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் காணப்படுவதை சுட்டிக் காட்டுகிறார்கள்.

இவ்வாறான மாணவர்களின் கல்வியில் பெரியவர்கள் என்னதான் அக்கறை செலுத்தினாலும் இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு ஓடித்தப்புவதிலேயே ஆர்வம் கொண்டவர்களாய்த் தென்படுவதைக் காணமுடிந்தது.

**மீன்பிடித் தொழில் பின்னடைவு**

நயினாதீவில் தற்போது மீன்பிடித் தொழிலே முக்கியமாகக் காணப்படுகின்றது எனினும் நாட்டுச் சூழ்நிலைகளால் அது பின்னடைந்துள்ளது. காலை 7.30 தொடக்கம் 10 மணி வரையும் தொழில் செய்ய அனுமதியுண்டு. பகல் தொழில் என்பதால் நண்டு மட்டுமே பிடிக்கக் கூடியதாக உள்ளது. ஒருவருக்கு ஒன்று முதல் 1 1/2 கிலோ வரைதான் நண்டு கிடைக்கிறது. அதில் கிடைக்கும் மிகக் குறைந்த வருமானத்தைக் கொண்டு 3 அல்லது 4 பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் எவ்வாறு சீவிக்க முடியும் என்கிறார் மீன்பிடித் தொழிலில் உள்ள ஒரு குடும்பஸ்தர்.

**வேறு கூலி வேலை இல்லை**

மீன்பிடித் தொழிலில் சுமார் 1000பேர் வரை ஈடுபட்டுள்ளனர். இருந்தபோதும் மிகக் குறைந்த அளவினரே தொழில்செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. நிவாரணமும் இல்லை; கூலி வேலைக்குப் போகலாமென்றால் கூப்பிடுவாரும் இல்லை; எங்கள் பாடு மிகவும் கஷ்டம். நெடுந்தீவில் இடம்பெற்ற தாக்குதலினால் தொழிலுக்குச் செல்வதில் மேலும் கஷ்டங்கள் என மீனவர்கள் கூறுகின்றார்கள்.

மீன்பிடிக்கு அடுத்து தோட்டப்பயிர்ச் செய்கை முக்கிய இடத்தை முன்பு வகித்து வந்தது.

கொழும்பில் எங்களது வெங்காயம், மிளகாய் குவிந்து கிடந்த நாள்கள் போய் வீட்டுத் தேவைக்கென இவற்றை யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டுவர வேண்டிய நிலையில் தாங்கள் இருப்பதாக அனுபவம் மிக்க விவசாயிகள் பெருமூச்சு விடுகிறார்கள். தண்டவாளத்தையே தெரியாத பிள்ளைகள் போன்று பசுமை குலுங்கிய வயல்களைக் காணாதவர்களாகிவிட்டார்கள் எமது சிறார்கள் என்பதும் அவர்கள் கவலை.

**புலம் பெயர்ந்தோர் வழங்கும் உதவி**

தீவில் மேற்கொள்ளக்கூடிய பிரதான

## நயினா தீவு மக்களின் இன்றைய வாழ்வியல்

தொழில்களும் இன்று தேய்ந்து விட்டன. விவசாயம் நினைத்துப்பார்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. இந்தச் சூழலில் புலம் பெயர்ந்தவர்களின் உதவிகள் தான் மக்களை ஓரளவாவது வாழ வைக்கிறது என்கிறார்கள் நயினா தீவு மக்கள். வெளிநாட்டில் பிள்ளைகள் இல்லாதவர்களின் நிலை பற்றிக் கேட்ட போது வெளிநாட்டில் உள்ள மக்கள் இங்குள்ள தமது அயல்வீட்டாருக்கும் இடைக் கிடை உதவி வருகிறார்கள் என்று குறிப்பிட்டார் கிராம அலுவலர் ஒருவர்.

**நன்னீருக்கு பெரும் பற்றாக்குறை**

நல்ல தண்ணீருக்குப் பலத்த தட்டுப்பாடு. 5ஆம் வட்டாரத்தில் மட்டும்தான் நன்னீர் கிடைக்கிறது. வைத்தியசேவைகள் பரவாயில்லையென்று பலரும் தெரிவித்தார்கள்.


மருந்துகளுக்கு எந்தத் தட்டுப்பாடும் கிடையாது. பணிப்பாளர் தாராளமாகத் தந்து உதவுகிறார் எனக்கூறும் வைத்திய அதிகாரி சண்முகரத்தினம் நிரந்தர வைத்திய அதிகாரி இல்லாததுதான் சிறிது கஷ்டமாக இருக்கிறது என்கிறார். மக்கள் இவருடன் மிகவும் நட்பாக இருக்கிறார்கள்.

இங்கே படைமுகாம் இருக்கிறது. பாதுகாப்பு அதிகாரிகளால் உங்களுக்கு பிரச்சினைகள் இல்லையா என்று கேட்டபோது அனைவருமே ஒட்டுமொத்தமாக இல்லை என்கிறார்கள். அப்படியானால் கடற்றொழிலுக்கு உங்களை அனுமதிக்கலாம்தானே என்றால் மேலிட உத்தரவுகளை அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது என்கிறார்கள். இதுவரை காலமும் எவ்வாறு படையினருடன் அன்பாக நடந்து கொண்டீர்களோ அதேபோன்று தொடர்ந்தும் நடந்துகொள்ளுங்கள் என்று கூறுவதாக அறிய முடிந்தது.

2 மைல்கள் நீளமுள்ள அந்தச் சிறிய தீவில் 25 இற்கு மேற்பட்ட ஓட்டோக்கள் நிற்பதுதான் ஆச்சரியமாக உள்ளது. துறை முகத்தில் இருந்து தென்பகுதியில் உள்ள மலையடிவரை செல்ல 300 ரூபாவை எடுக்கிறார்கள். இந்தத் தூரத்தை ரூபா 15 உடன் பயணித்துவிடமுடியும். எனினும் அம்பாள் ஆலய உற்சவ காலங்களில் ஓட்டோக்களுக்கு உழைப்பு இருக்கிறது. வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் துறைமுகத்தில் இருந்து தமது வீடுகளுக்குச் செல்ல 500 ரூபா வரை தாராளமாக வீசிவிடுவதுண்டு. அவர்களை நம்பித்தான் ஓட்டோக்களைக் கொள்வனவு செய்ததாகவும் இதை மட்டும் தனித்தொழிலாக எவரும் செய்வதில்லை எனவும் வேறு ஏதாவது ஒ[illegible] தொழிலையும் மேற்கொள்வதனால்தான் [illegible]ன்றாடம் கஞ்சியாவது குடிக்க முடிகிறது [illegible]னவும் ஓட்டோ வைத்திருக்கும் ஒருவர் கூறினார்.

முன்னரெல்லாம் விலைவாசிகள் சற்று அதிகரித்தாலும் அது பற்றி பெரிதாக எவரும் அலட்டிக் கொள்வதில்லை. அப்போது நல்ல சூழ்நிலையும் இயல்பான வாழ்க்கை முறையும் இருந்தது. இப்போது அப்படியல்ல. வருமானம் குறைவு, நல்ல போஷாக்கான உணவுகள் கிடைப்பதில்லை. தொழில்கள் முடங்கிக் கிடக்கின்றன. கடைகளில் மாறுபட்ட நிலையில் பொருள்களின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றன. ஏறிய விலைகள் எக்காரணம் கொண்டும் மீண்டும் குறைவதில்லை. இதனால் முன்னைய சந்தோசமான வாழ்க்கை இப்போது கிடையாது என்கிறார்கள் மக்கள்.

நயினாதீவின் சின்னமாக விளங்கும் நாகபூசணி அம்பாள் ஆலயம்



அம்பாள் ஆலய உற்சவ காலங்கள் அங்குள்ள மக்களுக்கு நிறைய வருமானத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும் காலம் எனலாம். பல்வேறு தொழில்களின் மூலம் வருமானம் கிடைக்கிறது. அமுதசுரபி அன்னதான சபையில் மட்டும் இக்காலங்களில் 85 இற்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில் கிடைக்கிறது.

**நம்பி**

இம்முறை அமுத சுரபி அன்னதான சபை தவிர்ந்த ஏனைய வழிகளில் கடந்த காலங்களைப் போன்று வருமானம் இல்லை. பாதுகாப்புக் கெடுபிடிகள், பக்தர்களின் குறைந்த வரவு என்பன இதற்குக் காரணங்களாகும்.

இயல்பு நிலையான வாழ்வு வெளிப்படையாகத் தென்பட்ட போதிலும் அச்ச உணர்வு இருப்பது இருக்கவே செய்கின்றது. பேச்சுவாக்கில் இதை உணர முடிகின்றது. *

---

# இன்றைய நோய்கள், நோயாளர்கள்; சிகிச்சை முறைகள், அவைகளின் பிரச்சினைகள்

## நாட்டின் சுகாதாரத்தை மேம்படுத்தும் சில வழிமுறைகள் (பகுதி- ஒன்று)



*விஞ்ஞானம், மூக்கின் மேல் விரல் வைத்து பிரமிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்ட இன்றைய கால கட்டத்தில் மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள், அவைகளுக்கான காரணங்கள், அவைகளுக்கான நவீன சிகிச்சை முறைகள் மட்டுமல்ல அந்த சிகிச்சை முறைகள் அரசினர் மருத்துவ மனைகளிலும் தனியார் துறைகளிலும் மேற்கொள்ளப்படும் முறைகள், அவைகளில் தோன்றும் தாரதம்யங்கள், அதற்கான காரணங்கள் எல்லாவற்றையும் நறுக்காக ஆனால் சுருக்கமாக ஆராய்ந்துள்ளார் யாழ்.போதனா வைத்தியசாலை பொது மருத்துவர் க.சிவனேசன் இந்தக் கட்டுரையில்.*

*யாழ்ப்பாணத்தில் இன்றைய காலகட்டத்தில் மருத்துவத்துறை எதிர்கொள்ளும் சிக்கல்கள், தீர்வுகள் பற்றி ஆராயும் மாணவர்களுக்கு இக்கட்டுரை ஒரு வழிகாட்டியாக அமையும் என்று கொள்ளலாம். ஏனைய வாசகர்களுக்கும் இக்கட்டுரை பயனுள்ளதாக இருக்கும்.*

ஆதிகாலத்திலிருந்து ஒரு நாட்டின் செழிப்பு அந்த நாட்டிலுள்ள பிரஜைகளின் தேக சுகத்தில் தான் தங்கியுள்ளதென வலியுறுத்தப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் ஔவையார் கூட அதிகமான அரசருக்கு தமது பாடல்களில் விவசாயத்தை அடிப்படையாக வைத்து கூறினாலும் ''குடியுயர கோன் உயரும்'' என்று கூறியுள்ளார். சுகமான வாழ்க்கையே ஒருவர் பெறும் பெரும் செல்வப் பேறு என்று கூறப்படுகிறது. உலக சுகாதார ஸ்தாபனம் சுகாதாரத்தை தனிநபரின் உடல், மன, சமூக, ஆன்மீக தன்நிறைவு என வரைவிலக்கணம் அமைத்து கூறுகிறது. மருத்துவத்துறையில் மருத்துவச் சிகிச்சைக்கு மருத்துவக் கல்வி ஆராய்ச்சிகளிலும் பார்க்க சமுதாயத்தில் கூடுதலான பங்கு அளிக்கப்பட வேண்டுமென நாடுகளில் அரசியல் சாசனத்திலும் மருத்துவக் கல்வியின் பாடத்திட்டத்திலும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இவை முன்பு ஐம்பதுக்கும் முற்பட்ட காலத்தில் வசதிபடைத்த குடும்பத்திற்கு உரித்தானதாக இருந்தது. பின்பு நாற்பது ஐம்பதுகளில் இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டதையடுத்து சமுதாயத்திலுள்ள அடுத்த மட்ட மக்களுக்கும் உரியதானது. பின்பு இறுதியாக அறுபதுகளில் சுய பாசாத் திட்டத்தில் தாய் மொழியில்




கல்வி அறிமுகம் ஆக்கப்பட்டதன் பின்பு சமுதாயத்திலுள்ள எல்லாத் தர மக்களுக்கும் இது உரித்தானது.

சுருக்கமாக கூறின் ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ மிசனறிமாரினால் நிர்வகிக்கப்பட்ட சுகாதார சேவை பின்பு குறிப்பாக வளர்ச்சியடைந்துவரும், வளர்ச்சியடையாத நாடுகளில் அவற்றின் சுதந்திரத்துக்குப் பின்பு அரச மயமாக்கப்பட்டு இறுதிக் கால் நூற்றாண்டு காலமாக ஆரம்ப இடைநிலை உயர்கல்வி தகவல், ஊடகத் தொடர்பு, தபால், தரை, வான், கடல் போக்குவரத்து, பொறியியல் கட்டடக்கலை, அரசியல் போர் தந்திரங்கள் என பல்வேறுபட்ட மதநிறுவனங்கள் போன்று படிப்படியாக தனியார் மயமாகி வியாபாரம் ஆக்கப்பட்டுள்ளது. உயர் தொழில்நுட்பம், உலக மயமாக்கல் போன்றவை நோய்களைக் கண்டுபிடிக்கும் சிகிச்சையளிக்கும் முறைகளில் மீண்டும் கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் மேற்கூறிய வைத்தியத்தில் முன்பு கூறிய துறைகளில் உள்ளது போன்று பாரிய மாற்றங்களை ஒரு நாட்டின் பொருளாதார, பிரஜைகளின் எண்ணிக்கை, பொருளாதாரத் தரம், அந்தந்த நாட்டின் பூகோள அரசியல் ஸ்திரமான, அற்ற நிலைகளுக்கு ஏற்ப வைத்தியத் துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் ஸ்திரமற்ற நாடுகளில் நிரந்தரமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளினால் உண்டாக்கப்படும் இடப்பெயர்வு, அன்புக்குரியவர்களின் பிரிவு, காயமுற்று நோய்வாய்ப்படுதல், அங்கவீனமாக்கப்படுதல், இறப்பு போன்றவற்றுடன் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம் அழிவு போன்றவைகளும் விருத்தியடைந்த மேற்கத்திய மருத்துவ சிகிச்சை பகிர்ந்து அளிப்பது வெகுவாக பாதிக்கிறது.

**நோய்களின் தன்மைகள் மாறுகின்றன**

மேற்கூறிய காரணிகள் தற்போது நோய்களின் தன்மையையும் முன்புபோல் அல்லாமல் மாற்றி அமைக்கிறது. மேற்கத்தேய, அரேபிய நாடுகளுக்கு எமது மக்கள் வேலை நிமித்தம் அல்லது குடியேறுதல் போன்ற காரணங்களினால் அவர்களின் உணவு [illegible] மாற்றப்பட்டு அதி உயர் இரத்த அமுக்கம், மாரடைப்பு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக ஆசியக் கண்டத்தில் முன்பு போல் அல்லாமல் இளவயதினரைப் பாதிக்கிறது. இதற்கு உடம்பு, அவர்களது வயதுக்கு உள்ளதிலும் பார்க்க பெருத்து பருமனாகக் காணப்படுவதும் உடம்பில கூடுதலான கொழுப்புச் சத்துள்ளதும் புகைத்தல் மதுபானப் பாவிப்பும் காரணங்களாகக் கூறப்படுகின்றது. புகைத்தல் பழக்கத்தினால் நுரையீரல் பாதிப்பும் (COA) மேற்கத்தேய நாடுகளில் உள்ளது போல் அதிக எண்ணிக்கையான மக்களைப் பாதிக்கிறது.

பொதுச் சுகாதார சேவை போன்றவற்றினால் மலேரியா காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டாலும் தற்போது டெங்கு, நெறிக் காய்ச்சல், சிக்குன்குனியா, பறவைக் காய்ச்சல் போன்றவை காலத்துக்குக் காலம் அதிகமாகப் பரவுகிறது. எச்.ஐ.வியும் இதற்கு விதிவிலக்கல்ல. அத்துடன் காச நோயும் முன்பு ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டாலும் தற்போது மீண்டும் குறிப்பாக ''எச்.ஐ.வி.'' நோயாளிகளில் அதிகமாகப் பரவுகிறது. அதிக மதுபானம் பாவிப்பதனாலும் ஏற்பட்ட பலதரப்பட்ட நோய்களும் இன்றைய நாள்களில் கூடிக்கொண்டு செல்கிறது. மேலும் இரப்பையழற்சி, மன உழச்சி, மனக்கவலை முன்பு கூறிய சமுதாயக் காரணங்களினால் கூடிக் கொண்டு செல்கிறது. வயோதிப நோயாளர்களின் எண்ணிக்கையும் கூடி அதனால் அவர்களை அதிகமாகப் பாதிக்கும் பாரிசவாதம் எலும்புத் தொகுதியில் ஏற்படும் பலவீனம் பின்னடைவு மற்றும் இவர்களுக்கு இரத்த அழுத்தம் சலரோகம், மாரடைப்பு தொய்வு போன்ற பலதரப்பட்ட நோய்களுக்கும் இவர்கள் உள்ளாகிறார்கள். இவற்றினால் இவர்களைத் தனியாக வைத்துப் பராமரிக்க வேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது.

**இரசாயனப் பொருள்களால் ஏற்படும் உடல் பாதிப்புகள்**

விவசாயத்திலும் அதி உணவுகளை பழுதாகாமல் பாதுகாப்பதிலும் நிறமூட்டுவதிலும் வாசனை ஏற்படுத்துவதிலும் அதிகமாக இரசாயனப் பொருள்கள் பாவிக்கப்பட்டு வாழ்க்கை செயற்கையாக மாறுவதினாலும் பலதரப்பட்ட [illegible] கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்படுவதினாலும் புகைத்தல், வெற்றிலை பாவிப்புக்களும் புற்றுநோய் அதிகமாக்கப்படுகிறது எனலாம்.

அத்துடன் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் பல பரிசோதனை முறைகளும் அதிஉயர் தொழில் நுட்பத்தினால் மேம்படுத்தப்பட்டதும் தற்போது புற்று நோய் முன்புபோல் அல்லாமல் அதிகமாகக் காணப் படுவதற்கு இன்னொரு காரணமாகக் கூறலாம். அதேநேரத்தில் பொதுச் சுகாதாரப் பிரிவு பெரியம்மை நீக்கப்பட்டதைப் போன்று போலியோவை உலகத்திலிருந்து மக்களைப் பாதிப்பதைத் தடுப்பதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கையும் போசாக்கின்மை முன்புபோல் அல்லாமல் படிப்படியாகக் குறைந்து வருவதும் மெச்சத்தக்கது. இது இந்தப் பிரிவின் சாதனை என்றும் கூறலாம்.

மற்ற மருத்துவப் பிரிவுகளில் தெரு விபத்துக்கள் அதிகமாவதும் விரும்பியோ விரும்பாமலோ மக்கள் வாழ்க்கையின் ஓர் அங்கமாக வரும் வன்முறைகளினால் காயப்படுவதும், இறப்பதும் சுகாதாரமற்ற முறையில் கருவழிப்பதும் திருமணத்திற்கு முன்னைய கர்ப்பிணியாகிப் பிரசவிப்பதும் கூடிக்கொண்டு செல்வதும் கவலை அளிக்கக் கூடிய விடயமாகிறது. முறையான சுகாதாரக் கல்வியும் இதற்கு முக்கியம். மேற்கூறிய மாற்றங்கள் தற்காலத்தில் நோய் மேல் எழுந்தமானமாகக் கவனிக்கப்படுகிறது.

மருத்துவ சிகிச்சைக்கான கல்வியும் பயிற்சியும் சேவையும் ஒரு நாட்டின் ஆட்சி, அரச உரிமை அதிகாரம் போன்ற தனிப்பட்ட பிரத்தியேக காரணங்களுக்காக பொருத்தமானதாக ஆக்கப்படுவதனால் மேலெழுந்த வாரியாக அது அழைக்கப்படும் விதத்தில் வேறுபட்டு மாறுபட்டுக் காணப்பட்டாலும் அவற்றை ஆழ்ந்து உற்றுநோக்குமிடத்தில் அவற்றின் அடிப்படைஒன்றாக இருப்பதென்பதை மருத்துவஉலகம்மறுக்கஇயலாது.

**சோதனைக்குத் தேவைப்படும் நேரம்**

ஒருவரின் தேவைபற்றி மிகவும் ஆறுதலாக இருந்து முற்றுமுழுதாகக் கதைத்தறிந்து பின்பு மிகவும் ஆறுதலாக விரிவாக முழுமையாக சோதித்து அடிப்படை பரிசோதனைகளைச்செய்து சிகிச்சையளிக்க முன்வரும்போது ஏறத்தாழ எண்பதுவீதமான நேயாளர்களை ஓரளவுக்குச் சரியாகக் கண்டுபிடிக்க முடியும். அனால் ஒருநோயாளியை முதல் முதலாகப் பார்க்குமிடத்து அவற்றைச் செய்ய குறைந்தது 45 நிமிடங்கள் எடுக்கும்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

### விசுவலிங்கம் அருளானந்தம்

[இளைப்பாறிய அதிபர், வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்]

எமது முன்னாள் அதிபர் விசுவலிங்கம் அருளானந்தம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/வியாவில் சைவவித்தியாலயம், காரைநகர்.
(64409)

## வீடு விற்பனைக்கு

19/6, காங்கரை வீதி, ஈச்சமோட்டையில் நல்ல சூழலில் உள்ள வீடு வளவு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- அ.போசகுலேந்திரன் உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
தொ.பே.0776241571
(64318)

## காணி விற்பனைக்கு

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் கொக்குவில், பிரம்படி ஒழுங்கையில் நிலப்பரப்பு 4, குளி 14 விற்பனைக்கு உண்டு.
(64418)

தொடர்பு:- 39,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## சிறப்பு கட்டணச் சலுகை IBMS

கணனிக் கற்கைநெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 05.09.2007
பிரிவு II : 15.09.2007
பகல்: 10 மணி

| | |
|---|---|
| Diploma in Microsoft Office - 3 Months | 1000/= |
| Diploma in Desk Top Publishing - 3 Months | 1000/= |
| Diploma in Internet Technology - 3 Months | 1500/= |

INTITUTE OF BUSINESS MANAGMENT STUDIES

M.M.V. Road,
Nelliyady, Karaveddy.
(64339)

# BE A DOCTOR



## Graduate in Eastern Europe

Doctor of medicine MD
English Medium



Recognized by SRI LANKA MEDICAL COUNCIL

உள்நுழையும் அனுமதி உத்தரவாதம்
அழைப்புக் கடிதம், அனுசரணைக் கடிதங்கள், வங்கிக் கணக்குக் கூற்று, விசா நேர்முகப் பரீட்சை எவையும் அவசியமில்லை

- PATHE ACADAMY அனுமதிக்கு விண்ணப்பித்த நாளிலிருந்து 20 நாட்களுக்குள் கற்கைநெறி அனுமதியும் விசா அனுமதியும் பெற்றுத்தரப்படும்.
- கல்விக்கான கடன்வசதி 5 நாள்களுக்குள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- தங்குமிட வசதி, இணையத்தள வசதி, பொழுதுபோக்கு வசதி, நூலக, ஆய்வுகூட வசதிகள், செயல்முறைக்கல்வி மற்றும் பரீட்சைக் கட்டணம் யாவும் இலவசம்.
- போக்குவரத்து, உணவு கட்டணங்கள், விசேட சலுகை அடிப்படையில்.
- இலங்கையிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் 200 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்றபின் தொழில் பார்க்கிறார்கள்.
- இல்ங்கைக்கான பிரதிநிதிகள் குழு உங்களுக்கு உதவவென 24 மணிநேரமும் காத்திருக்கின்றனர்.
- வெளிநாட்டவர்களுக்கு ஐரோப்பிய நாட்டில் கற்க மிகவும் பாதுகாப்பான இடம். (ஆசிய சிநேக சுற்றாடல்)
- பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உட்பட உலகின் ஏனைய பல நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பருவகால விடுமுறை வேளையில் சென்று பகுதிநேர தொழில் பார்க்கும் வாய்ப்பு.
- பட்டம் பெற்ற பின்னர் ஐரோப்பாவில் குடியேற வாய்ப்பு.
- வருடாந்தக் கட்டணம் இரு தவணைகளில் செலுத்தும் வாய்ப்பு.

NOW 0% INTEREST INSTALLMENT PLAN BY MAJOR CREDIT CARDS

தமிழில் தொடர்புகொள்ள: 0773017883

PATHE ACADAMY மூலம் அனுமதி பெற்ற மாணவர்கள் விபரம், ஏனைய தகவல்களை எமது இணையத்தள முகவரியிலும், அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

The Programme is executed in par with ACT 16 Exams syllabus

Transfer from other universities    Engineering (IT) other courses also available

**Register Today, Fly Immediately! For admissions & Inquires 0773017883**

PATHE ACADEMY

Overseas Student Placement Department
37, School Lane, (Entrance from duplication Rd.) Colombo-03
Tel: 5377752, 2502012, 2591271 www.patheacdemy.org.

## விற்பனைக்கு

கடை அலுமாரி, சோக்கேஸ், TVS Champ, கட்டில்கள், மேசை என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:- ஐ.குமாரசாமி
40/1, 2ஆவது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.021 222 8374
(64319)

## சக்கோட்டை (அல்வாய் - வடக்கு), பருத்தித்துறை கிழக்கு சுனாமி நிவாரண நிரந்தர வீடமைப்புத் திட்டத்திற்கான கட்டடப் பொருள்களுக்குரிய கூறுவிலை கோரல்

கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவ் வழங்கல்களுக்காக கூறுவிலைகோரும் விண்ணப்பப்படிவத்தினை எமது அலுவலத்தில் பெற்றுக்கொள்ளலாம், வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக் கொண்ட விவரங்களுக்கு ஏற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 07-09-2007 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்குக் கிடைக்கக் கூடியதாக *" இயக்குநர், கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம் "* என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பியோ அல்லது நேரடியா கவோ கையளிக்கமுடியும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் *"கட்டடப் பொருள்கள் வழங்கலுக்கான கூறுவிலை"* என எழுதப்பட்டிருக்கவேண்டும்.

இவை 10.09.2007 முற்பகல் 11.30 மணிக்கு அலுவலத்தில் தங்கள் முன்னிலையில் உறைகள் திறக்கப்படும்.

| பொருள்களின் விவரம் | அலகு | சக்கோட்டை தொகை | பருத்தித்துறை தொகை |
|---|---|---|---|
| தட்டை-ஓடு | எண்ணிக்கை | 30000 | 19800 |
| முகட்டு ஓடு | எண்ணிக்கை | 2500 | 468 |

இயக்குநர்,
கரித்தாஸ் கியூடெக்,
*14, மத்தியூஸ் வீதி, தியோகு தெரு, யாழ்ப்பாணம்.*
(சி/53527)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
05
★
11
★
1957



உதிர்வு
20
★
07
★
2007


## அமரர் செல்லத்துரை சண்முகதாசன்

(உரிமையாளர், அல்டி எலக்ரோனிக்ஸ்)

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்திகேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்குபற்றி ஆறுதல் கூறி இறுதிக்கிரியைகளிலும் கலந்துகொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் இன்று (02-09-2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புக்கரம் கூப்பி அழைக்கின்றோம்.

*11, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.*
-குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## வேலர் இராசதுரை

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் அரசடிவீதி, கொலனி, தோப்பு, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலர் இராசதுரை 30.08.2007 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டிவேலன் சுப்பர் கதிராசி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கதிர்காமு-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பூரணம், செல்லம்மா, இராசம்மா, நடராசா (திருமகள் அரிசி ஆலை - உரிமையாளர், அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை வீதி), பரமகுரு (பாலசிங்கம் - பிரான்ஸ்), தம்பிராசா (பிரான்ஸ்) காலஞ்சென்ற பிள்ளையம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மஸ்ரீ (யாழ்ப்பாணம் ஆரியகுளம்), வசந்தகுமாரி (இந்தியா), விஜியகுமாரி, பத்மராசா (பிரான்ஸ்), இரத்தினேஸ்வரி (புவானி-பிரான்ஸ்), வசந்தராசா (பிரான்ஸ்), உதயகுமாரி, ரஜினகுமாரி, ரசிகரன் (கண்ணன்-பிரான்ஸ்), பிரதீபன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீபரன், தம்பிரத்தினம் (சவுதி), அருள்ஞானம் (லண்டன்), உதயபாஸ்கரன் (பிரான்ஸ்), கிருபா (பிரான்ஸ்), தவச்செல்வம் (டோகா), ஜீவா ஆகியோரின் அன்பு மாமனும், ஜெயதர்சினி, சிவதர்சன் (டோகா), றொசாந்தன் (டோகா), நிரோஜன் (டோகா), சுதர்சினி, கஜின் (டோகா), நிஷாந்தினி (ஹொலண்ட்), ஜெயந்தினி (பிரான்ஸ்), நிலாகரன் (பிரான்ஸ்), நிதர்சினி (இந்தியா), சிவமூர்த்தி (ஹொலண்ட்), ஜோதி (பிரான்ஸ்), கார்த்திகன், அஜித், கார்த்திகா, சரத், விதுர்ஷன், திசா, தனுசா, யானு, சாரியன், சிந்துஜன், சியானி, விதுஜன், வினோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கந்தசாமி செல்லத்துரை, நாகமுத்து, கந்தசாமி, செல்வராணி, தேவி (பிரான்ஸ்), தயாநிதி (பிரான்ஸ்), அன்னம்மா, பூமணி, சிவக்கொழுந்து, அழகம்மா சோமு, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் உறவினர், பொதுமக்களின் பார்வைக்காக புஞ்சி பொறளையில் அமைந்துள்ள கெலின்புர மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (02-09-2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாதம்பிட்டி இந்து மயாணத்துக்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*63, சென்ஜேம்ஸ் வீதி,*
*கொழும்பு - 15.*

தகவல்:
**வே.நடராசா**
*(சகோதரன்).*
(சி/53529)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி. விருதுக்கு 6 ஆஸி. வீரர்கள்; ஜெயசூர்யா, மஹேல, முரளிதரன், சங்ககார ஆகியோரும் இந்தப் பட்டியலில்!


முரளிதரன்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வழங்கும் 2007ஆம் ஆண்டின் சிறந்த வீரர்களுக்கான விருதுப் பட்டியலில், அதிகபட்சமாக ஆஸ்திரேலிய வீரர்கள் 6 பேர் இடம்பெற்றுள்ளனர்.

நடப்பாண்டின் சிறந்த வீரர்களுக்கான ஐ.சி.சி. விருதுகள், அடுத்த மாதம் 10ஆம் திகதியன்று ஜோகன்னஸ்பர்க்கில் வழங்கப்படவுள்ளது.

இந்த விருதுகளுக்கு பரிந்துரைக்கப்படும் வீரர்களின் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. டெஸ்ட் போட்டிகளில் மொத்தம் 19 வீரர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இப்பட்டியலில், இந்தியாவின் சார்பில் ஜாகீர்கான், அனில் கும்ளே மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சிறந்த வீரர், இந்த ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரர் மற்றும் சிறந்த அணித்தலைவர் ஆகிய பிரிவுகளில் வேறு எந்த இந்திய கிரிக்கெட் வீரரும் இடம்பெறவில்லை.

உலகக் கிண்ணத்தைத் தட்டிச் சென்ற ஆஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங், இலங்கை அணியின் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் 4 பிரிவுகளில் இடம்பெற்றுள்ளனர்.

ஆஸ்திரேலிய அணி வீரர்கள் மைக்கல் கிளார்க், மத்தியூஹேடன், ஹசே, மெக்ராத், ஷேன் வோர்ன் ஆகியோரும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கையின் அதிரடிவீரர் சனத் ஜெயசூர்யா, முரளிதரன், குமார் சங்ககார ஆகியோரும் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

பட்டியலில் இடம்பெற்றுள்ள மற்ற வீரர்களின் விவரம்:-

பீற்றர்சன், பனேசர் (இங்கிலாந்து), ஷோன் பொலக், நிற்றினி (தென்னாபிரிக்கா), முகமது யூசுப், முகமது ஆசிப் (பாகிஸ்தான்), பிறையன்லாரா, சந்தர்பால் (மேற்கிந்தியத் தீவுகள்)

எதிர்வரும் ருவென்ரி - 20 உலக கிண்ண போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை அணியில் இருந்து சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் காயம் காரணமாக விலகியுள்ளார்.

## இந்தியப் பயிற்சியாளர் பதவிக்கு ஜோன் டைசன் விண்ணப்பம்

தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் ருவென்ரி - 20 உலகக்கிண்ணம் தொடங்கவுள்ள நிலையில், முரளிதரனின் முழங்கையில் காயம் ஏற்பட்டுள்ளதால், அவரால் அடுத்த 6 வாரங்களுக்கு விளையாட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட்டின் செயலாளர் கங்காதரன் மதிவாணன் தெரிவித்தார்.




மேலும் ருவென்ரி - 20 உலகக்கிண்ணப் போட்டிகளில் கண்டிப்பாக முரளி பங்கேற்கமாட்டார் என்றும் திட்டவட்டமாக கூறினார்.

### சிம்பாப்வே அணிக்கு புதிய பயிற்சியாளர்

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக முன்னாள் அணித்தலைவர் ராபின் பிரவுன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகின் பிரச்சினைக்குரிய கிரிக்கெட் அணிகளுள் சிம்பாப்வேயும் ஒன்று. இனப்பிரச்சினை, கிரிக்கெட் சபையுடன் மோதல் என பல்வேறு காரணங்களால் அணியின் செயற்பாடு படுமோசமான உள்ளது. இந் நிலையில் அணியின் பயிற்சியாளராக இருந்த கெவின் கரன், நீக்கப்பட்டுள்ளார். புதிய பயிற்சியாளராக முன்னாள் அணித்தலைவர் ராபின் பிரவுன் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது 56 வயதாகும் இவர் வரும் ருவென்ரி - 20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து, அணிக்குப் பயிற்சி அளிக்கவுள்ளார். இதுகுறித்து ராபின் பிரவுன் கூறுகையில், "அணிக்குப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. சிம்பாப்வே அணி தற்போது நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. எனது பயிற்சியின் மூலம் அணியின் தரத்தை உயர்த்த பாடுபடுவேன்'' என்றார்.


ஜோன் டைசன்

பிறவுன் இதுவரை 7 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். 1990இல் ஓய்வு பெற்றார். 2007 உலக கோப்பையின் போது சிம்பாப்வே அணியின் உதவி பயிற்சியாளராக இருந்தார்.

### பயிற்சியாளர் பதவி டைசன் விண்ணப்பம்

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவிக்கு ஆஸ்திரேலியாவின் ஜோன் டைசன் விண்ணப்பித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த சப்பல் தனது பதவியை சமீபத்தில் ராஜினாமா செய்தார். இப்பொறுப்புக்கு தேர்வு செய்யப்பட்ட கிரஹாம் வாய்ப்பை ஏற்க மறுத்தார். தற்போது இப்பதவி வெற்றிடமாக உள்ளது. இதற்கு தகுந்த நபரை தேர்வு செய்ய இந்திய கிரிக்கெட் சபை மும்முரமாக ஈடுபட்டுள்ளது. பயிற்சியாளர் பதவிக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்குமாறு சில நாள்களுக்கு முன்னர் இந்திய கிரிக்கெட் சபை விளம்பரம் வெளியிட்டது. இதற்கு முன்னாள் ஆஸ்திரேலிய வீரர் ஜோன் டைசன் விண்ணப்பித்துள்ளார். டைசன் இதுவரை 30 டெஸ்ட், 29 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள் ளார். கடந்த 2003 - 2005 வரை இலங்கை அணியின் பயிற்சியாளராகவும் அவர் செயற்பட்டுள்ளார்.


சங்ககார

### லீக்கில் சேரும் வீரர்களை பணிநீக்கம் செய்யக் கூடாது

இந்திய கிரிக்கெட் லீக்கில் சேர்ந்த பொதுத்துறை நிறுவன வீரர்களை பதவி நீக்கம் செய்ய இடைக்கால தடை விதித்து டெல்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## டிலான்

இந்திய கிரிக்கெட் சபைக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள கிரிக்கெட் லீக் அமைப்பில் வீரர்கள் சேர்வதற்கு கிரிக்கெட் சபை கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தது.

மேலும் அங்கு சென்று வரும் வீரர்கள், மீண்டும் இந்திய கிரிக்கெட் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள் என்றும் அது கூறியிருந்தது.

இதனை எதிர்த்து கிரிக்கெட் லீக் டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி சஞ்சய் கிஷன் தனது உத்தரவில், கிரிக்கெட் லீக்கில் சேரும் வீரர்கள் மீது கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுக்க முடியாது.

அதேபோல, பொதுத் துறை நிறுவனங்களை சேர்ந்த வீரர்களை, அந்நிறுவனம் பதவி நீக்கம் செய்யக் கூடாது.

இவ்வாறு தனது உத்தரவில் தெரிவித்து இருந்தார்.

இந் வழக்கை அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு அவர் ஒத்தி வைத்துத் தீர்ப்பளித்தார். ★

# தமிழ் ஆராய்ச்சிக்குப் புதிய பரிமாணம் கண்ட மேதை



தனிநாயக அடிகளார் மறைந்து 27 ஆண்டுகள் நகர்ந்துவிட்டன. பத்து ஆண்டுகள்வரை அவரை யாரும் நினைவு கூரவில்லை. அவர் நோய் வாய்ப்பட்டதால் அவர் வாழ்வும் பணியும் இடை நிறுத்தப்பட்டன என்று சொல்லலாம். நோய் வாய்ப்படாமல் இருந்திருந்தால் அவர் பணி தொடர்ந்திருக்கும்.

அவர் தமிழாராய்ச்சிக்குப் புதிய பரிமாணம் கண்டார். ஒரு சிறு அளவில்தானும் தமிழ்/திராவிட தொடர்புகொண்ட அனைத்தும் தமிழாராய்ச்சிக்கு உட்பட்டவையே என்று புதிய வரைவிலக்கணம் கண்டார். அந்த அடிப்படையில் உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்த தமிழ் அறிஞர்களை ஒன்று கூட்டி அவர்கள் சார்ந்த பற்பல துறைகளில் தமிழ்/திராவிட தொடர்புள்ள ஆய்வுகளை மேற்கொள்ளச் செய்தார். 'தமிழ்ப் பண்பாடு' என்ற பெயரில் ஒரு காலாண்டிகை மூலம் 1952 - 1968 வரை ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். அதன் மூலம் தமிழாராய்ச்சி சார்ந்த ஒரு புதிய அறிஞர் சமூகத்தை இனங்கண்டு இணைத்தார்.

அதன் வழியாக ஒரு புது முயற்சியாக பன்னாட்டுத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தை உருவாக்கி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அறிஞர்கள் ஒன்று கூடி ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து கருத்துப் பரிமாற வழிவகுத்தார். அவர் கருத்தில் உருவாகி இரண்டாவது மாநாட்டில் அங்கீகாரம் பெற்று தமிழக அரசினால் நிறுவப்பட்டதுதான் இன்று அடையாற்றில் இயங்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். அதன் முதல் பணிப்பாளராக அவர் அந்த நிறுவனத்தை ஆக்க வழியில் வழி நடத்தி அலங்கரிப்பார் என்ற எதிர்பார்ப்புகள் அரசியல் அலைகளில் அடிபட்டுப் போய்விட்டது. இன்று அது ஒரு சாதாரண தமிழ்ச் சங்கம் போல் இயங்குகிறது. அதுவும் பணப்பற்றாக்குறையால் தள்ளாடுகிறது.

நான்கு மாநாடுகளில் அடிகளார் தலைமை ஏற்று நடத்தினார். ஐந்தாவது மாநாடு அரசியல் செல்வாக்குக்கு உட்பட்டபோதிலும் ஒருவாறு வெற்றிகரமாக மதுரையில் நடைபெற்றது. ஆறாவது மாநாடும் (மலேஷியா) ஏழாவது மாநாடும் (மொறீஷியஸ்) வெறும் அரசியல் பிரசார முயற்சியா கிப் பிசுபிசுத்து அடிபட்டுப் போய்விட்டன. மலேஷியாவில் படிக்கப்பட்ட அருமையான கட்டுரைகள் கூட என்ன ஆனது என்று தெரியாமல் எங்கோ மறைந்துவிட்டன. மொறீஷியஸ் மாநாட்டில் ஆராய்ச்சியே அடிப்பட்டுப் போய்விட்டது. தகுதியான பலர் கலந்துகொள்ளவுமில்லை. தகுதியான கட்டுரைகள் ஒருசிலவே இடம்பெற்றன. இவை அவர் தொடக்கி வைத்த நல்ல பணிக்கு நேர்ந்த ஊறுகள்.

இன்று தமிழ் ஆராய்ச்சி பல துறைகளாக்க் கிளைத்துப் பரந்துவிட்டது. ஒரு மூன்று நான்கு நாள்களுள் அதற்குப் போதுமான அளவு இடமளிக்க முடியாது. ஒரு வாரம் நீடிக்கக்கூடிய அளவுக்கு அது பரந்துவிட்டது.

அதனால் ஒவ்வொரு தனித்தனி துறைகளையும் வைத்து விரிவான ஆய்வுகளை மாறி மாறிநடத்த வேண்டும் என்ற நோக்கில் தனிநாயகம் மன்ற நம்பிக்கையம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக் கருத்தரங்கு ஒன்றை 1991 மாசி மாதம் தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் இந்திய கல்வெட்டியியலாளர் சங்கத்தினரின் 17ஆவது மாநாட்டுடன் இணைத்து நடத்தப்பட்டது. பத்துக் கட்டுரைகள் வரை படிக்கப்பட்டன. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகள் மேலும் நுணுகி ஆராயப்பட வேண்டும் என்ற கருத்து வேரூன்றி தொடர்ந்தும் ஆய்வுகளை நடத்தப்படவேண்டும் என்ற ஆர்வத்தை இந்திய அறிஞர்களிடமும் தோற்றுவித்துள்ளது.

ஆயினும் தமிழாராய்ச்சிப் பணிக்கு போதுமான பண உதவி கிட்டுவதாக இல்லை. அடிகளார் இருந்தகாலை அவருடன் தம்மை இணைத்து முதன்மைப்படுத்தியவர்கள் அக்கறையின்றி ஒதுங்கிவிட்டனர். பன்னாட்டு தமிழாராய்ச்சிக் கழகம் இருந்த இடம்தெரியாமல் போய்விட்டது. தாய்க் கழகமே வெறும் மாநாட்டுக் கழகமாக மாறிவிட்டது. மாநாட்டுக்காகக் கூடுவதும் குலைவதுமாக உள்ளது.

"எழுதி வழங்காதான் வாழ்க்கை கழுதை மேய்ந்த களம்" என்பது பழமொழி. தமிழர் வாழ்வு, பண்பாடு, வரலாறு, கலைச்செல்வங்கள் பாரம்பரியங்கள் பற்றி நாம் இலங்கையில் எழுதி வைக்கவில்லை. அண்மைக்கால அரசியல் வரலாற்றைக் கூட எழுதாத பெருமை இலங்கைத் தமிழரையே சாரும். இதில் நாம் தவறுவதால் நமது இனம் இந்நாட்டில் உரிமையோ, தளமோ இல்லாத இனமாக மாறிவிடுவதைத் தவிர்த்துவிட முடியாது. யானை தன் துதிக்கையால் சேற்றை அள்ளித் தன் தலையில் போட்டுக்கொள்ளும் வரலாறாகவே முடியும்.

இதை அடையப் புரவலர்கள் உதவி தேவை. அரசர்கள் உதவி இன்றில்லை. நமது சகோதர இனத்தில் உள்ள வசதி படைத்தவர், வர்த்தகர்கள் முதலானோர் தமது மொழி, பண்பாடு, கலை, கலாசார முயற்சிகளுக்கு வாரி வழங்குகின்றார்கள். அதனால் அவர்களிடம் மேம்பாடு வளர்கிறது. நமது மத்தியில் பணம் படைத்தவர்கள் இல்லாமல் இல்லை. தாராளமாக இருக்கிறார்கள். கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் இதில் நாட்டமுள்ள மனம் மட்டும் இல்லை. அவர்கள் மனம் இத்துறைக்கு ஆதரவாகப் பக்குவமடையும் வரை இந்த முயற்சிகள் எல்லாம் கானல் நீராகிவிடலாம். நல்லது நடக்குமென எதிர்பார்ப்போமாக.

**(நேற்று அடிகளாரின் 27ஆவது நினைவு தினம்)**

**(நன்றி: ஆ.தேவராஜன்)**

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.2

நல்லூர் பெருந்திருவிழாவை முன் னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணி மண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் 16ஆம் நாளான இன்று ஞாயிற்றுக் கிழமை 'அன்றும் இன்றும் சைவம்' என்னும் தலைப்பில் ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு சொற் பொழி வாற்றுவார்.

நீர்வேலி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (203-09-111)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



**சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும்**
**மறக்குறத்தி வள்ளி மணாளா! - நிறக்கொடிகள்**
**ஆடும் அழகுடைய நல்லூர் வாழ் ஆண்டவனே**
**நீடும் அருள்தருவாய் நீ.**

*- யோகர் சுவாமிகள்.*

### உயிராய் உறவாய் முருகா வருவாய்!

அழகுக் குமரனே அமைதிக்காய் அருளவேண்டும்
ஆறுமுக வேலனே ஆசிகள் தந்திட வேண்டும்
இனிமை பொங்கி இடர்கள் நீக்கிடவேண்டும்
ஈசன் மைந்தனே ஈகை பெருக்கிடவேண்டும்
உமை யின் பாலனே உயர்வுகள் வழங்கிடவேண்டும்
ஊரது வாழ்ந்திட ஊக்கமது உயர்த்திடவேண்டும்
எழிலின் வேந்தனே மக்கள் மகிழ்வுற வேண்டும்
ஏக்கம் களைந்திட ஏணியாய் ஏற்றிடவேண்டும்
ஐயம் களையவே ஐசுவரியம் நிறைந்திடவேண்டும்
ஒன்று சேர்ந்திங்கு ஒற்றுமை வளர்த்திடவேண்டும்
ஓதும் அடியாரின் அவல ஓசை ஓய்ந்திடவேண்டும்
ஔவை அருளவனே ஔடவதமாய்க் காத்திடவேண்டும்.

- மு.வே.அன்பழகன்.

### நீயருள மாட்டாயா?

ஞாலமதில் வந்தெமக்கு நல்ல குருநாதனெனும்
கோலமதைக் காட்டிவிடு கொடுமைகளைத் துரத்திவிடு
ஆலமது நிறைந்தோர் செய் அநியாயம் பொடிபடவே
நீலமயில் வாகனனே நீயருள மாட்டாயோ?

- மு.க.சிவானந்தம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்

இறையியல் பாடநெறியைப் பூர்த்தி செய்து டிப்ளோமா பட்டத்தை பெறும் எமது சபைப் போதகர் வீ.கனகராஜா உடன் ஏனைய சபை ஊழியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**"இறை அரசு வளர!**
**உங்கள் பணி தொடர்க!"**

**- கல்வாரி வாலிபர்கள்.**

(64407)

சக்கோட்டை (அல்வாய்- வடக்கு) சுனாமி நிவாரண நிரந்தர வீடமைப்புத் திட்டத்திற்கான வர்ணப் பூச்சுப் பொருள்களுக்குரிய

## கூறுவிலை கோரல்

கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வர்ணப் பூச்சுப் பொருள்கள் **Deluxe** மற்றும் **Oppcolite** நிறுவனங்களினுடையதாக இருத்தல் வேண்டும்.

வழங்கல்களுக்காக கூறுவிலைகோரும் விண்ணப்பப்படிவத்தினை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக் கொண்ட விவரங்களுக்கு ஏற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 07.09.2007 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக "இயக்குநர், கரித்தாஸ்- கியூடெக், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரடியாகவோ கையளிக்க முடியும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வர்ணப் பூச்சுப் பொருள்கள் வழங்கலுக்கான கூறுவிலை" என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இவை 10.09.2007 முற்பகல் 10 மணிக்கு அலுவலகத்தில் தங்கள் முன்னிலையில் உறைகள் திறக்கப்படும்.

| பொருள்களின் விவரம் | அலகு | தொகை |
|---|---|---|
| Emulson Paint Interior | Liters | 875 |
| Emulson Paint Exterior | Liters | 400 |
| Water Sand Paper | Dozen | 280 |
| Sand Paper (Red Color) | Dozen | 60 |
| Brush 4" Haris/ C.I.C (No.1) | Nos | 40 |
| Brush 2" Haris/ C.I.C (No.1) | Nos | 25 |
| Brush 3/4" Haris/ C.I.C (No.1) | Nos | 50 |
| Brush Lime | Nos | 90 |
| Filler | Liters | 700 |
| Polyurethane Vanish | Liters | 240 |
| Turpentine | Liters | 120 |
| Aluminum Anti Corrosive Paint | Liters | 30 |
| Putty | Liters | 130 |
| B.O.P | Kg | 20 |

(F-53528)

**இயக்குநர், கரித்தாஸ்- கியூடெக்,**
**14, மத்தியூஸ் வீதி, தியோகு தெரு, யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துகின்றோம்







யாழ்.பிரபல வர்த்தகர் எஸ்.வி.முருகேசு அவர்களின் பேர்த்தியும், நிர்வாகப் பணிப்பாளர் குணரத்தினம்- பத்மினி தம்பதியரின் புதல்வியுமான செல்வி **தயாந்திகா** அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று (02.09.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும். இந்நாளில் அவரைப் பல்கலைகளும் கற்று மேன்மேலும் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **ச.வி.முருகேசு நிறுவன பணியாளர்கள், கொழும்பு, யாழ்ப்பாணம்.**

(64422)

# யா/கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர்
## உயர்திரு கனகரத்தினம் கனகேஸ்வரன் அவர்களின்
## சேவைநலன் பாராட்டு மலர்- 02.09.2007

### சிறந்த விஞ்ஞான ஆசிரியர்



கனகரத்தினம் கனகேஸ்வரன் அவர்கள் எமது கல்லூரியிலே கடந்த ஐந்து ஆண்டுகளாக விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை சிறப்புறக் கற்பித்துவந்த நல்லாசிரியர். குறிப்பாக விஞ்ஞான பாடத்தை ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கு எமது கல்லூரியில் ஆசிரியர்கள் இல்லாத ஒரு சந்தர்ப்பத்தில் கைகொடுத்துதவியவர். இவர் விஞ்ஞான ஆசிரியரானாலும் கூட சிறந்த ஆங்கில புலமையுடையவராய் இருந்தமையால் ஆங்கில பாடத்தையும் மாணவர்களுக்கு கற்பித்து உதவியவர். அவரின் இந்த சேவைமனப்பான்மையை கல்லூரிச் சமூகம் நன்றியுடன் நினைவு கூருகின்றது. அவர் தனது ஐம்பதைந்தாவது அகவை நிறைவில் ஓய்வு பெற்றுச் செல்கின்றார். அமைதியாக தனது கடமைகளைச் செய்து வந்த கனகேஸ்வரன் அவர்களின் ஓய்வு காலம் அவர் தம் குடும்பத்தினருடன் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் அமைய வாழ்த்துகின்றேன்.

**S.V. மகேந்திரன்**
பிரதி அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி.

### அமைதியும் ஆற்றலுமுடைய நல்லாசிரியர்




கனகரத்தினம் கனகேஸ்வரன் அவர்கள் எனது நீண்டகால நண்பன். மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் எனக்கு அறிமுகமானவர். மிக அமைதியான சுபாவம் உடையவர். சிறந்த விஞ்ஞான ஆசிரியராகத் திகழ்ந்தவர். நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய வேளை அங்கு இடமாற்றம் பெற்று வருகை தந்திருந்தார். முதலில் விஞ்ஞான பாடம் கற்பிப்பதில் ஈடுபடுத்தப்பட்ட இவர் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை காரணமாகவும், இவரிடம் காணப்பட்ட ஆங்கில அறிவு காரணமாகவும் இடைநிலை வகுப்புகளில் ஆங்கிலப் பாடமும் கற்பிப்பதில் ஈடுபடுத்தப்பட்டுவந்தார். தரம் 6இல் ஆங்கில மொழிமூலம் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட வேளை அதன் பொறுப் பாசிரியராகவும் இவர் நியமிக்கப்பட்டிருந்தார். தனக்கு ஒப்படைத்த பணிகளைப் பொறுப்புடன் நல்லமுறையிலும் செய்து முடிக்கும் திறன் உடையவர். தனது கற்பித்தல் திறனினால் மாணவர் மத்தியில் நன்மதிப்புப் பெற்ற ஆசிரியராகவும் திகழ்ந்தவர்.

இவர் தொடர்ந்தும் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்ற முடியுமாயினும், தனது சொந்தத் தேவை கருதி முன்னதாகவே சேவையிலிருந்து இளைப்பாறுவது கல்லூரிக்கும் மாணவருக்கும் பேரிழப்பாகும்.

இவரது ஓய்வுகாலம் மகிழ்வாகவும், நலமாகவும் அமையவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**பொ.கமலநாதன்,**
இளைப்பாறிய அதிபர்.



### கனகரத்தினம் கனகேஸ்வரன்

(Special Trained Science, S.L.T.S-I)=

| | |
|---|---|
| ஆரம்பக்கல்வி: | யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை |
| உயர்தரக்கல்வி: | யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி |

*சேவை விவரம்:*

| | |
|---|---|
| 06.06.1977- 30.03.1981 | இ/ இரத்தினபுரி த.ம.வி. |
| 31.03.1981- 12.05.1981 | இ/அல்முக்கியா மு.ம.வி. |
| 13.05.1981- 17.02.1982 | இ/ பலாங்கொடை ஜெயிலானி மு.ம.வி. |

*பயிற்சி ஆசிரியர்:*

| | |
|---|---|
| 18.02.1982- 31.12.1984 | யா/பலாலி ஆசிரியர் கலாசாலை |
| 01.01.1985- 30.04.1986 | கிளி/ முருகானந்த ம.வி. |
| 01.05.1986- 02.09.1992 | யா/மல்லாகம் ம.வி. |
| 03.09.1992- 08.09.1998 | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 09.09.1998- 31.12.2002 | யா/ மானிப்பாய் மெமோறியல் ஆ.பா. |
| 01.01.2003- 02.09.2007 | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி |

### அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஆசிரியர்



கனகரத்தினம் கனகேஸ்வரன் அவர்கள் மூன்று தசாப்தங்களாக கல்வித்துறையில் சிறப்புற பணியாற்றி இன்று தனது 55 ஆவது அகவையின் நிறைவில் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். இச் சர்ந்தர்ப்பத்தில் அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.

மானிப்பாய் மெமோரியல் பாடசாலையிலிருந்து மாற்றலாகி கொக்குவில் இந்துவில் கடந்த நான்கு வருடங்களாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஆசிரியர். இவர் ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழிமூல, ஆங்கில மொழிமூல விஞ்ஞானம் ஆகிய பாடங்களைத் தான் பெற்றுள்ள பல்மொழித் தேர்ச்சியினால் எளிய நடையில் சிறப்புற கற்பித்தலை மேற்கொண்டார். மாணவர்களுடனும் சக ஆசிரியர்களுடனும் தனது அறிவசார்ந்த அனுபவங்களைப் பகிர்ந்து சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

இவரது இன்றைய பிறந்ததின நன்னாளில் சக ஆசிரியர்களுடன் இணைந்து வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இவரது ஓய்வு காலம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**இ.ச.உமாசுதன்,**
தலைவர், ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

### வினைத்திறன் மிக்க ஆசிரியர்



மாணவர் மனங்களை வென்று, அவர்களுக்கு இலகுவாகப் புரியும்படி கற்பிப்பதில் தனக்கென ஒரு கற்பித்தல் முறையைக் கையாண்ட ஆசிரியர் கனகரத்தினம் கனகேஸ்வரன் ஆவார். விசேட விஞ்ஞானப் பயிற்சி ஆசிரியராக இருந்தபோதும் ஆங்கிலம், ஆங்கிலமொழி மூல விஞ்ஞானபாடங்களையும் வினைத்திறனாகக் கற்பிப்பதில் வல்லவராக விளங்கினார்.

பரிசுத்தினம், இல்ல விளையாட்டுப்போட்டி போன்ற பாடசாலை நிகழ்வுகளின் போது தமது கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றிப் பாராட்டுப் பெற்றதோடு, பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்பட்டார். மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற இவர் சக ஆசிரியர்களால் பெரிதும் நேசிக்கப்பட்டார். இவரது ஓய்வு கல்விச்சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல சிருபாஹர சுப்பிரமணிய சுவாமிகள் அருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

**அ.ஆனந்தராசா,**
செயலாளர்,
ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(64363)

**ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மனித உரிமை மீறல்களை மூடி மறைப்பதும் குற்றம்தான்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அமைதித் தீர்வு காண்பதிலும் நாட்டில் மனித உரிமைகளைப் பேணுவதிலும் கொழும்பு அரசு பொறுப்புணர்வோடு செயற்படவில்லை என்று அதிருப்தி கொண்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியம், இது தொடர்பான தனது அதிருப்தியையும் விசனத்தையும் இலங்கைக்கு உணர்த்தும் வகையிலும், இலங்கை மீது அழுத்தம் ஒன்றை பிரயோகிக்கும் விதத்திலும் சில நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகி வருகின்றது எனச் செய்திகள் கசிந்துள்ளன.

ஏற்கனவே பிரிட்டன், ஜேர்மனி போன்ற நாடுகள் இதே காரணத்துக்காகத் தமது உதவித் திட்டங்களை இடைநிறுத்தியிருக்கின்றன.

அதேபோல, ஐரோப்பிய ஒன்றியமும் இதுவரை இலங்கைக்கு தான் வழங்கி வந்த வரிச்சலுகைகளை விலக்கி, இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுக்கக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தை இலங்கை கையாளும் முறைமை சர்வதேச மட்டத்தில் கடும் கண்டனத்துக்கும், விமர்சனத்துக்கும் உள்ளாகியிருக்கின்றது. இந்தப் பின்புலத்திலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிருப்தியும் வெளிப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டம் இன்னும் எட்டு நாள்களில் சுவிஸ் நாட்டின் ஜெனிவா நகரில் ஆரம்பமாக இருக்கின்றது. இலங்கை நிலைமை பற்றிய விடயம் அங்கு அக்குவேறு ஆணி வேறாகப் பிய்த்து உதறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை நிலைமை குறித்து அங்கு வெளிப்படும் விவகாரங்கள் - அம்பலமாகும் உண்மைகள்- இலங்கை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் எடுக்கக் கூடிய முடிவுகளுக்கு வலுச் சேர்ப்பனவாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஆள்கள் கடத்தப்படுதல், காணாமல் போகச் செய்யப்படுதல், படுகொலை செய்யப்படுதல், கப்பம் அறவிடுதல், ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் அச்சுறுத்தப்படுதல் போன்ற மோசமான மனித உரிமை மீறல்கள் இலங்கையில் அதிகரித்துச் செல்வது குறித்தே ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணைக்குழுவின் கூட்டத்தில்- இலங்கை சம்பந்தமான விவகாரத்தில் - பிரதானமாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய மனித உரிமை மீறல்கள் இலங்கையில்- குறிப்பாகத் தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு, கிழக்கிலும் தலைநகர் கொழும்பிலும் கவலைதரும் விதத்தில் அதிகரித்து வருவது குறித்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் அபாய மணி எழுப்பி வருகின்றன. மனித உரிமைகள் பேணப்படும் விவகாரத்தை உலகளாவிய ரீதியில் ஊன்றிக் கவனித்துவரும் முக்கிய அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை கூட கடந்த வியாழனன்று தான் வெளியிட்ட பிந்திய அறிக்கையில் இதனைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சுட்டிக் காட்டியிருக்கின்றது. சர்வதேச ரீதியிலான தனது அவதானிப்புகளை வெளிப்படுத்தியுள்ள மன்னிப்புச் சபை, இலங்கை விடயத்தில் பலவந்தமாகக் கடத்தப்பட்டு ஆள்கள் காணாமற்போகச் செய்யப்படுவது கடந்த சில மாதங்களாக மோசமாக அதிகரித்திருப்பதாகக் கவலை தெரிவித்திருக்கின்றது.

இவ்வாறு கடத்தல், காணாமற்போகச் செய்தல் ஒரு புறம் தீவிரமடைய மறுபுறம் அதைச் சமாளித்து உண்மையை மூடி மறைக்கும் கொழும்பின் எத்தனமும் கூட முனைப்புற்றிருக்கின்றது.

இப்படி ஆள்கள் கடத்தப்பட்டு காணாமற்போகும் சம்பவங்கள் பெருமளவில் இப்போது குறைந்திருக்கின்றன என்றும் -

கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரை காணாமற்போனவர்கள் என்று கூறப்பட்ட 1992 பேரில் 1425 பேர் மீண்டுவிட்டனர் என்றும் -

ஒரு புள்ளி விவரக் கணக்கோடு தகவல் வெளியிட்டிருக்கின்றார் காணாமற்போதல் மற்றும் கடத்தல்கள் குறித்து விவாதிப்பதற்கு அரசு நியமித்துள்ள தனிநபர் ஆணைக்குழுவின் ஆணையாளரான ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி மகாநாம திலகரட்ண.

யாழ். குடாநாட்டு நிலைமைகளை ஒரு தடவை இந்த ஆணையாளர் ஊன்றிக் கவனித்திருப்பாராயின் இப்படி நிலைமை சீரடைந்து வருகின்றது என்ற ஒரு கருத்தை அவர் வெளியிட்டிருக்கமாட்டார் என நம்பலாம்.

குடாநாட்டில் மர்ம நபர்களினால் ஆள்கள் கடத்தப்படுவதும் சுட்டுக்கொல்லப்படுவதும் பெருங் கொடூரமாகத் தொடர்கின்றது. யாழ்.குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கூறும் படைகளோ இந்த அராஜகங்கள் யாவற்றையும் இனந்தெரியாத தரப்புகள் மீது சுலபமாக சுமத்திவிட்டு ஆசுவாசமாக அமர்ந்திருக்கின்றன.

யாழ். குடாநாட்டில் அடிக்கடி அங்கு ஆயுதம் கைப்பற்றினோம், இங்கு புலிகளின் ஊடுருவல் முயற்சியை முறியடித்தோம், அத்தனை புலிகளைப் பிடித்தோம், இத்தனை புலிகளைக் கைது செய்தோம் என்றெல்லாம் படைத்தரப்பு அவ்வப்போது கதை விடுகின்றது. ஊடகங்களும் அச்செய்திகளைத் தாராளமாக எடுத்துச் சென்று மக்களுக்குத் தெரிவிக்கின்றன.

ஆனாலும் குடாநாட்டைத் தமது முழுக் கட்டுப்பாட்டில் வைத்து, வெற்றிகரமாக இவ்வளவு புலி முறியடிப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் படையினர் யாழ். குடாநாட்டையே பெரும் பயங்கரத்துக்குள் ஆழ்த்தியிருக்கும் இந்தக் கொடூரக் கொலையாளிகள், ஆள்கடத்தல்காரர்களை ஒரு தடவையாவது வழி மறிக்கத் தன்னும் முடியவில்லை; இயலவில்லை.

இத்தகைய இயலாமை வெளிப்படுத்தி நிற்கும் உண்மை என்ன? அதற்குள் உறைந்து - புதைந்து - கிடக்கும் சூட்சுமம் என்ன? இவை எல்லாம் கூட ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தில் அம்பலமாகும், வெளிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கலாம்.

அப்போது மகாநாம திலகரட்ண ஆணைக்குழு போன்றவற்றின் சமாளிப்பு அறிவிப்புகள், அறிக்கைகள் கந்தலாகி விடும் என்பது நிச்சயம்.

ஆள்கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல் போன்ற மோசமான மனித உரிமை மீறல்களை மூடி மறைக்க முயல்வது கூட அந்த மனித உரிமை மீறல்கள் போன்றே மோசமான குற்றங்கள்தாம். சம்பந்தப்பட்டோர் இதை உணர்வது நல்லது.

# மருத்துவ மாணவர்களின் உள்ளகப் பயிற்சி: சாதக, பாதகங்கள் குறித்த கருத்து நிலை

உலகம் முழுவதும் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது என்று சொன்னால் மிகையாகாது. வெளிநாடுகளில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் மேலை நாடுகள் மருத்து..ர்களை வரவேற்கின்றன. இதனால் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள் மேலை நாடுகளில் சென்று குடியேறுகின்றனர்.

இலங்கையிலும் நீண்ட காலமாக மருத்துவர்களுக்குத் பற்றாக்குறை நிலவுகிறது. அதிலும் குறிப்பாக யுத்தம் நடைபெறும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மருத்துவர்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவுகிறது.

### தென்கிழக்காசியாவின் முதல் மருத்துவக் கல்லூரி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்திலும் டாக்டர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. யாழ்ப்பாணத்திற்கென சில தனிச்சிறப்புகள் உண்டு. இவற்றில் வைத்திய சேவையும் ஒன்று. தென்கிழக்காசியாவிலேயே முதல் மருத்துவக் கல்லூரி யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.

அமெரிக்காவிலிருந்து யாழ்.மக்களுக்குச் சேவை செய்வதற்காக யாழ்ப்பாணம் வந்த டாக்டர் கிறீன் வட்டுக்கோட்டையில் ஒரு மருத்துவக்கல்லூரியை ஆரம்பித்தார். பின்னர் இக்கல்லூரி மானிப்பாய்க்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

டாக்டர் கிறீன் 1848- 1879 காலப் பகுதியில் 134 மருத்துவர்களை உருவாக்கினார். 10,000 பேருக்கு ஒரு மருத்துவர் என்பதே கிறீனின் நோக்கமாக இருந்தது.

யாழ்ப்பாணம் நீண்ட காலமாக சிறந்த மருத்துவ சேவையை மக்களுக்கு வழங்கி வந்துள்ளது. பல தனியார் வைத்தியசாலைகளும் சிறந்த வைத்திய நிபுணர்களும் யாழ்.மக்களுக்கு கடந்த காலங்களில் அளப்பரிய சேவையை வழங்கியுள்ளனர்.

இணுவில் ஆஸ்பத்திரி, மானிப்பாய் ஆஸ்பத்திரி, மூளாய் ஆஸ்பத்திரி, எட்டாங்கட்டை ஆஸ்பத்திரி (தெல்லிப்பழை) போன்ற தனியார் மருத்துவமனைகள் மிகச் சாதாரண மக்களிடையே கூட செல்வாக்குச் செலுத்தின. இவற்றைவிட வைத்திய நிபுணர்களின் பெயர்களிலும் மருத்துவமனைகள் சிறப்பாகச் செயற்பட்டு வந்தன.

இவ்வாறு சிறந்த மருத்துவ சேவையை அனுபவித்து வந்த யாழ்ப்பாண மக்கள் இன்று இராணுவ விமான மூலம் கொழும்புக்கு கூட்டிச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். யாழ்ப்பாணத்திலும் மருத்துவர்களுக்கு பாரிய பற்றாக்குறை நிலவுகின்றது.

தற்போது கிட்டத்தட்ட 239 மருத்துவர்கள் குடாநாட்டுக்குத் தேவைப்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் இன்றுவரை 1,300 மருத்துவப் பட்டதாரிகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியேறி இருப்பதாக யாழ். பல்கலைக்கழக இணையத் தளம் தெரிவிக்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வெளியேறிய மருத்துவப் பட்டதாரிகளில் நான்கில் ஒரு பங்கினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து யாழ். மக்களுக்கு சேவை செய்தாலே யாழ். குடாநாட்டில் நிலவும் மருத்துவர் வெற்றிடங்கள் பூர்த்தியாக்கப்பட்டுவிடும்.

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் வசிப்பதற்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்ற மாணவர்கள் விரும்பவில்லை என்பதே கசப்பான உண்மை. மருத்துவர்களின் வெளியேற்றத்திற்கு பிரதான காரணியாக விளங்குவது இன்றைய போர்ச் சூழலும் யுத்தமுமே.

யாழ். குடாநாட்டில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சுகாதார அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை அடுத்து சுகாதார அமைச்சர் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்விபயிலும் மாணவர்கள் ஒருவருடம் வடக்கு - கிழக்கில் கட்டாய சேவையாற்றவேண்டும் என்ற பிரேரணையை அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளார்.

இது குறித்து பிரமுகர்கள் சிலரிடம் கேட்டபோது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்

### ஒரு வருட சேவை புரிந்தால் போதும்

**பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்:-**

இவர்கள் யாழ்ப்பாணத்தில்தான் பிறந்தவர்கள். யாழ்ப்பாணத்திலேயே கல்வி கற்றவர்கள். யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்கள். இவர்களை ஒரு குறுகிய காலத்திற்கு(ஒரு வருடத்திற்குத்தான்) இங்கு சேவையாற்றுமாறு கேட்கின்றோம். சில வேளை குறிப்பிட்ட காலம் முடிந்ததும் தம்மை விடுவிக்கமாட்டோம் என இவர்கள் அஞ்சக்கூடும். அதற்கு நான் உத்தரவாதம் அளிக்கின்றேன். குறிப்பிட்ட காலம் முடிந்ததும் நான் அவர்களை விடுவிப்பேன். யாழ்ப்பாணத்தில் சேவையாற்றுவதற்கு தமிழ் மருத்துவர்களே தயக்கப்பட்டால் சிங்கள மருத்துவர்களை எப்படி நாங்கள் எதிர்பார்ப்பது.

**வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை:-**

மாவட்ட அடிப்படையில், பின்தங்கிய மாவட்ட அடிப்படையின் கீழ் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்கள் குறுகிய காலத்திற்கு தமது சொந்த மாவட்டங்களிலேயே கடமையாற்ற வேண்டும் என அரசாங்கம் சட்டமியற்ற வேண்டும். இது இலங்கை முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

**சமூக சேவையாளர் எஸ்.பரமநாதன்:-**

தனது மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. தற்போது மருத்துவர்களுக்குத் பற்றாக்குறை நிலவுவதால் பெருந்தொகைப்பணம் செலவு செய்து கப்பல் மூலமும் விமானம் மூலமும் நோயாளிகள் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு செல்ல வேண்டியநிலை காணப்படுகிறது.

எல்லோராலும் இவ்வளவு பெருந்தொகைப்பணம் செலவு செய்து கொழும்பு செல்ல முடியாது. அத்துடன் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் விரிவுரையாளர்களுக்குத் பற்றாக்குறை நிலவுகிறது. இதை நிவர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மருத்துவர்கள் இக்கட்டான சூழலிலும் கடமையாற்றக் கடமைப்பட்டவர்கள். தெற்காசியாவிலேயே சிறந்த வைத்திய நிபுணர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் சைக்கிளில் வந்தும் சேவையாற்றியுள்ளனர். தமது பிரதேச மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் தங்கியிருக்கும் மருத்துவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் - என்றார்.

**மருத்துவ மாணவர் ஒருவரின் பெற்றோர்:-**

தென்னிலங்கை வைத்தியசாலைகளைப் பொறுத்த மட்டில் அங்கு பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அவை இயங்கி வருகின்றன.

இந்நிலையில் அந்த வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சிகளை மேற்கொள்ளும் முஸ்லிம் மற்றும் சிங்கள மருத்துவ மாணவர்கள் அந்த நவீன வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தித் தமது பயிற்சியை மேற்கொள்கின்றார்கள். இதன் காரணமாக அவர்கள் தமது துறையில் எதிர்காலத்தில் சிறந்து விளங்குவதற்குப் பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கின்றன.

ஆயினும் வடக்கு - கிழக்கு வைத்தியசாலைகளில் அந்த நவீன வசதிகள் எதுவும் இதுவரை போதியளவு ஏற்படுத்தப்படவில்லை. இந்நிலையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ள எமது பிள்ளைகள் இந்த வைத்தியசாலைகளில் எவ்வாறு தமது உள்ளகப் பயிற்சிகளைத் திறம்பட மேற்கொள்கொள்ள முடியும் - என்று கேட்டார்.

**வைத்திய மாணவர்களின் நிலைப்பாடு சரியானது என்று கருத்துத் தெரிவிக்கிறார் ந.சண்முகராசா:-**

புள்ளிவரிசைப்படுத்தப்பட்டு வரும் நிரலில் (Merit Order) முன்னணியில் திகழ்பவர்கள், கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில வைத்தியசாலை போன்றவற்றில் பிரபல வைத்திய நிபுணர்களின் கீழ் பணி புரிய விரும்புவது இயல்பே.

பிறமாவட்டங்களில் பாதுகாப்புக் கெடுபிடிகள் குறைவு. போக்குவரத்து மற்றும் வசதிகளும் உண்டு.

கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் வைத்தியசாலைகளில் தமிழ் மருத்துவ மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய அருமந்த இடங்கள் பறிபோய் அது சிங்கள, முஸ்லிம் வைத்திய மாணவர்களுக்குக் கிடைக்கவும் வழி செய்வதாகும். இது தமிழ் வைத்திய மாணவர்கள் தரத்தில் மேம்பட்ட வைத்தியர்களாக உருவாகுவதைத் தடை செய்யும்.

சந்திப்பு:
**பரராஜன்**

யாழ்.மாவட்டம் உட்பட வடக்கு - கிழக்கு பகுதிகளில் நிலவுகின்ற சுமுகமற்ற சூழல் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் தமிழர் பிரதேசங்களில் உள்ள பிற வைத்தியசாலையில் நிலவும் வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையே புகுமுக மருத்துவ மாணவர்கள் பிறமாவட்டங்கள் மீதான நாட்டத்திற்குக் காரணம் என்பதை, கொழும்பிலிருந்து வெறும் அறிக்கைகள் விடும் அரசியல்வாதிகள் புரிந்துகொள்வது நல்லது - என்றார்.

**வைத்தியப் படிப்பை முடித்து விட்டு உள்ளகப் பயிற்சிக்கு காத்துக்கொண்டிருக்கும் வைத்திய மாணவன் ஒருவன் கூறியதாவது-**

யாழ். மருத்துவபீடத்தில் விரிவுரையாளர்களுக்கு பற்றாக்குறை. அதுபோன்றே போதனா வைத்தியசாலையில் நிபுணர்களுக்குப் பற்றாக்குறை. இது இன்று நேற்று உண்டானதல்ல. 10, 15 வருடங்களாக புரையோடிவிட்ட விவகாரம். இப்போது அங்கு ஒரு பேராசிரியர் கூட கடமையில் இல்லை. இந்தப் பற்றாக்குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காமல் உள்ளகப் பயிற்சி பெறுவோரை நிர்ப்பந்திப்பது பொருத்தமற்றது. சில மருத்துவ நிபுணர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்ற விரும்பிய போதிலும் கடந்த காலங்களில் அதற்கு ஆப்பு வைக்கப்பட்டமை கசப்பான உண்மையாகும்.

இவற்றைக் கவனத்தில் கொள்ளாது - சீர்தூக்கிப் பார்க்காமல் - எங்களைப் போன்றவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவது அநியாயமானது. நாம் திறமையான டாக்டர்களாக வெளியேறி மீண்டும் வந்து எம் சமூகத்திற்குப் பணி புரிவதைத் தடுக்கும் வஞ்சகமே எனலாம் - என்றார்.

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 17 | திங்கட்கிழமை 03.09.2007 |
| திதி : சப்தமி | பின்னிரவு 01.32 |
| நட்சத்திரம் : | கார்த்திகை பி.இ. 12.34 |
| சுபநேரம் | : 12.05 - 01.35 |
| ராகுகாலம் | : 07.35 - 09.05 |

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடம்பெயர்ந்து கொண்டிருந்த பொது மக்களின் வாகனத்தின் மீது ஆழ ஊடுருவும் அணியினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் காயமடைந்தவர்கள் சிலாவத்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதைப் படத்தில் காணலாம்.

## ஜெனிவாவில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகும்

# ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் மாநாட்டுக்கு இலங்கையின் சார்பில் ஐவர்

## உயர் அதிகாரிகளை அனுப்புவதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு,செப்.2

எதிர்வரும் 10 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில், இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து விரிவாக ஆராயப்படலாம் என்றும், இலங்கை மீது கண்டனம் தெரிவிக்கும் நிலைப்பாடு அங்கு வெளிப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படும் நிலையில் -

இந்த மாநாட்டுக்கு இலங்கை அரசு சார்பில் சிரேஷ்ட அரச அதிகாரிகள் ஐவர் கொண்ட குழுவென்றை அனுப்பிவைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த வருடத்தில் பொதுமக்கள் 547 பேர் கொலைசெய்யப்பட்டிருப்பதுடன், 396 பேர் காணாமற்போயுள்ளனர் என ஐந்து ஐரோப்பிய தொண்டு நிறுவனங்களினால் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டுக்கு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு அங்கு பதிலளிப்பது அரசுப் பிரதிநிதிகளின் முக்கிய பொறுப்பாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி ரஜீவ் விஜேசிங்க, பிரதி சொலிசிட்டர் ஜெனரல்களான ஷமிந்திர பெர்னாண்டோ, யசந்த கோதாகொட, ஷிராணி ஜயதிலக ஆகியோர் உட்பட ஐவர் இக்குழுவில் இடம்பெறவுள்ளனர்.

இவர்கள் அங்கு செல்வதற்கு முன்னர் அடுத்த வாரத்தில் சட்டமா அதிபர் சீ. ஆர்.டி. சில்வா மற்றும் கலாநிதி ரஜீவ் விஜேசிங்க ஆகிய இருவரும் ஜெனிவாவுக்குச் சென்று ஐரோப்பிய சமூகத்தின் தூதுவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என்றும் தெரியவருகிறது.

(சி)

### குடிசன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களும் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அந்தப் பணி நிறுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் இந்தப் பணியை முன்னெடுக்கத் தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-1)

### இடம்பெயர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா இராணுவத்தின் வலிந்த தாக்குதலையடுத்து 6ஆயிரத்துக்கும் மேற் பட்ட மக்கள் அரிப்புப் பகுதியிலிருந்து நானாட்டான் ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல முயன்ற போதும் அவர்கள் அரிப்பு வீதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணு வத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் கொலையுண்டோர் விவ ரம் வருமாறு -

- திருமதி ஜேன்ஸ் (வயது 32)
- ஒஸ்கார்(வயது 22)
- எஸ்.செல்வகுமார்(தாக்குதலுக்கு உள்ளான வாகத்தின் சாரதி)
- திருமதி செல்வகுமார்(வயது 32)
- திருமதி செல்வகுமாரின் மகன் (வயது 5)
- செல்வகுமாரின் மாமியார் (வயது 55)
- சுபாஸ்கரன்
- குழந்தை(பெயர் கிடைக்கவில்லை)
- பெண் ஒருவர் (பெயர் கிடைக்கவில்லை)

(அ)

### மட்டக்களப்பில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி ஹேரத் அறிவுறுத்தியுள்ளார் என்று அந்த ஊடகம் தெரிவித்தது.

சில தினங்களுக்கு முன்னர் புதூர் சந்தியில் கருணாகுழு உறுப்பினர் ஒருவர் இரு கிரனேட்டுக்களுடன் கைதுசெய்யப்பட்டது தெரிந்ததே. (அ-1)

### தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் கலாசாரப் பேரவையைச் சேர்ந்த செல்வி சுகுணா, பருத்தித்துறை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை, பண்டிதர் எஸ். வேலாயுதம், யாழ். பல்கலைக்கழக விரிவு ரையாளர் கலாநிதி கலாமணி, ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.நடராசா, அதிபர் ந.சிவநாதன், ஆலய நிர்வாகி செ.செல்லம்மா ஆகியோர் மத்திஸ்தர்களாகப் பணியாற்றினர்.

கடந்த 2002 ஆம் ஆண்டு கொழும்பில் தொடர்ந்து 7 1/2 மணி நேரம் இராமாயணம் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி தே. சண்முகம் என்பவர் நிலைநாட்டிய சாதனை நேற்று முறியடிக்கப்பட்டுள்ளது.

(அ-1-155)

### கல்வியியற் கல்லூரி செவ்வாய் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.2

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் 3ஆம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

கற்றல் நடவடிக்கைக்காக முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவரையும் நாளை மாலை கல்லூரி விடுதிகளுக்கு சமூகமளிக்குமாறு கல்லூரியின் உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை கேட்டுள்ளார். (202)

### பொலிஸ் ஆள்சேர்ப்புக்கு திருமலையில் சுவரொட்டிகள்

திருகோணமலை மாவட்டத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் சேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான அறிவித்தல் சுவரொட்டி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆண், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்களைப் பணிக்குச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதை அறிவிக்கும் சுவரொட்டிகள் நகர் எங்கும் ஒட்டப்பட்டிருக்கின்றன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ்மா அதிபரின் பெயரில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டியில், பணியில் இணைய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலாளர் ஊடாக அனுப்பிவைக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. (சி)

### மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமான நடவடிக்கை யாகவே புதிய தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதா கவும் இராணுவப் பேச்சாளர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது வடக்கில் பெரும் இராணுவத் தாக்குதல் நடத்தும் திட்டம் எதுவும் அரசுக்கு இல்லை என்று வெளிநாட்டமைச்சா போகொல்லாகம, மலேஷியாவில் வைத்துக் கடந்த வியாழக்கிழமை ரொய்ட்டருக்கு பேட்டி அளித்திருந்தமை தெரிந்ததே.

இத்தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல் எதுவும் வெளியாகவில்லை. (அ-1)

BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்
A/L 2008 கணித உயிரியல்
Day Class
ஆரம்பம் 03.09.2007 நேரம் 9a.m

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கீழ்வரும் கணனிக்கற்கை நெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!
- Advanced Diploma in Information & Communication Technology
- Advanced Diploma in Computer Hardware Engineering
- Advanced Diploma in Computer Programming
- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Computerized Accounting Packages
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 0777-110862
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )

BBS இன் வெற்றிகரமான புதியபிரிவுகள்
A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான குறுகிய கால ஆங்கில வகுப்புக்கள்
CERTIFICATE IN ENGLISH
DIPLOMA IN ENGLISH
IELTS
தவணை முறையில் கட்டணம் செலுத்தும் வசதி
பாடசாலைமாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்
Pre-Foundation · Foundation · Lower Intermediate · Intermediate · Upper Intermediate
BRITISH BUSINESS SCHOOL

ICT Grade 10 English / Tamil Medium R. Kumaran - B.Sc.
Potpathy Road, Kokuvil
T.P. 0776577359 புதிய பிரிவுகள் ஆரம்பம்.

NEW SCIENCE HALL
இணைந்த கணிதம்
A/L Day Class (2007 - Repeat)
Model Papers
Mon - Fri 7.00 - 8.15(a.m)
ஆரம்பம் : Mon (2007/09/03)
BY: P.செந்தில்நாதன்
(64431)

உடன் தொடர்புக்கு
வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகள்....
உங்கள் இல்லத் தொலைபேசிகளில்....
ஆகக் கூடிய ஒரு நிமிடக் கட்டணம் 3 ரூபா மட்டுமே.
கூடுதல் நிமிடம் பேசுவோருக்கு சிறப்புச் சலுகைகள்
தொடர்பு : எஸ்.இராஜன்
031 222 3101, 031 222 3102
(64399)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
* Computerized Accounting (Tally, Accpack, MYOB, QuickPro)
* MS Office *DTP *V.B., .net
* Hardware * Web Designing
* Vide Editing *AutoCAD *3D Designing
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
பதிவுகள் 27-08-2007 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தின் விசேட கணனிப் பயிற்சித் திட்டம்.
MCS Supported By UNDP/JRRP
பதிவுகள் 27-08-2007முன் நேரில் 324, பலாலிவீதி, யாழ்ப்பாணம்

மானிப்பாயில் முதன் முதலில்
100% Practical Education
After A/L??
Diploma in Computer Servicing Technician
Electronic Components Study
Digital Electronics
Practical Electronics (UPS, Power supply, Monitor, Printer)
Telecommunication
Trouble Shooting Guides
Computer Customizations
PC Assembling
Etc..
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
Manipay T.P:- 0777-110862
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )

### மரண அறிவித்தல்

#### வேலுப்பிள்ளை அன்னலட்சுமி

விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அன்னலட்சுமி நேற்று (01.09.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - செங்கமலம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சந்திரசேகரம், நவரட்ணசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் கிருபாராணி, விபுலானந்தன் (மூர்த்தி - லண்டன்), வித்தியானந்தன்( கீர்த்தி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரமானந்தம்(ரூலின்ஸ் உத்தியோகத்தர்), தயபவாணி(லண்டன்), பிரியதர்சினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கோபிகிருஷ்ணா, சுகந்தா, பாலரூபன், துவாரகசீலன், சோமஸ்கரன், அயூரன், சயூரன், ஜெயூரன், அபிநாஸ், அனுஸஸன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு இல்லத்தில் இன்று(02.09.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.பரமானந்தம் (மருமகன்).

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org